Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 22 (26.01.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 117

English Academy

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Email: thangan 672002 @ yahoo.com

T.P. - 021-2222588

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பிரதான வீதி, சித்தன்கேணி.

உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்

Better Place for your Children

(சி-474)

## பிரபாகரனது மிகப் பெரிய வெற்றி மக்களைத் தன்னோடு வழிநடத்துவது

### வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ

(கட்டார்)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள இணக்கம் நிரந்தரமான திருமணம் போன்றது. இங்கு விவாகரத்துக்கு இடமில்லை என வெளியுறவு அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

கல்வ் நியூஸ் (**Gulf News**) சஞ்சிகைக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஐ.நா.பொதுச்செயலாளர் பதவிக்கு போட்டியிடுவதற்கு ஆதரவு தேடுவதற்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ள அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ அங்கே கல்வ் நியூசுக்குப் பேட்டியளித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

(10 ஆம் பக்கம் பார்க்க)



## 900 மில்லியன் ரூபா மோசடிக்கு ஜனாதிபதி சந்திரிகாவே பொறுப்பு

### முன்னாள் பிரதமர் ரட்ணசிறி சாட்சியம்

(கொழும்பு)

இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து முறைகேடாக நடத்தப்பட்ட பண மாற்ற விடயங்கள் யாவற்றுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், திறைசேரிச் செயலாளராக இருந்த ஜயசுந்தரவுமே பொறுப்பு என முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்தில் 900 மில்லியன் ரூபா, மோசடியான விதத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தற் செலவுக்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது பற்றி சி.ஐ.டியினர் மேற்கொண்டுவரும் விசாரணைகளின் போது முன்னாள் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளின் இராணுவம் சமஷ்டி அமைப்புக்குள் இயங்கலாம்!

### வழியிருப்பதாகக் கூறுகிறார் ரணில்



(கொழும்பு)

**சமஷ்டி அரசுக்குள்ளும் தனியான இராணுவம், பொலிஸ் என்பன இயங்கக்கூடிய கட்டமைப்புக்களும் உலகில் உள்ளன. இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறை மூலமான தீர்வு காணப்படுமானால் விடுதலைப் புலிகளின் இராணுவமும் தனித்து இயங்க வழிமுறைகள் இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.**

லங்கா தேசிய தொழிற்சங்கத்தின் 123 ஆவது பேராளர் மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர், இனப்பிரச்சினைத் தீர்விற்கான இறுதித்தீர்வு மக்களிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்- நிரந்தர தீர்வு ஏற்படும்வரை விடுதலைப்புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைவது என்ற பேச்சுக்கே இடமில்லை. நிரந்தரத் தீர்விற்கான அரசியல் யாப்பைத் தயாரிக்கும் வேலைத்திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. விடுதலைப்புலிகளுடன் நல்ல புரிந்துணர்வுடனேயே பேச்சுவார்த்தைகள் இடம்பெறு கின்றன. விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைந்துவிட்டு பேச்சுவார்த்தை நடத்துமாறு சிலர் வற்புறுத்துகின்றனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர்கள் முதல் முதியவர்களுக்கு மிகவும் பயங்கரமான எச்சரிக்கை!

யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிக்கிறது ஒரு புதுவிதமான காய்ச்சல்!

(விபரம் 9ஆம் பக்கத்தில்)

### மூதவை உறுப்பினர் ஒருவரின் நுழைவு தடுப்பு

## புதிய துணைவேந்தர் தெரிவு புதனன்றுக்கு பிற்போடப்பட்டது

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்காக நேற்று நடைபெறவிருந்த மூதவைக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக வாசலில், மாணவர்கள் நேற்றுக் காலை மறியல் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். மூதவை உறுப்பினர் ஒருவரை வளாகத்துக்குள் செல்லவிடாமல்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை சட்டபூர்வ இராணுவமாக்க பிரதமர் ரணில் முயற்சி செய்கிறாராம்

### சிஹல உறுமய பிரசாரச் செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை இலங்கையின் தனியான இராணுவமாகப் பிரகடனப்படுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை செய்து வருவதாக சிஹல உறுமய்வின் பிரசார செயலாளர் உதய தம்மம்வில தெரிவித்திருக்கின்றார்.

புலிகளை சட்டபூர்வமான இராணுவமாக பிரகடனப்படுத்துவது தொடர்பாக இந்திய இராணுவ அதிகாரி லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியாரிடம் அரசாங்கம் ஆலோசனைகளை கேட்டிருந்தது. அவர் அதனை

(10ஆம் பக்கம் பார்க்க)


## பகிடிவதையில் ஈடுபடுவோர் மீது பல்கலைக்கழகம் கடும் நடவடிக்கை

பகிடிவதையில் ஈடுபடும் மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக நிர்வாகம் பகிடிவதையினை என்றுமே அனுமதிக்கப்போவதில்லை. இதற்கு மாறாக பகிடிவதையில் ஈடுபடும் மாணவர்கள் மீது தயவுதாட்சணியம் எதுவுமின்றி உடனடியாக நடவடிக்கை

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



ஆட்சியில இருந்தால் அரசாங்கக் காசெல்லாம் சொந்தக்காசெண்டு நினைச்சிட்டா போல...

நமது ஈழநாடு வழங்கும்

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

'MEGA' பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

இரண்டாம் பரிசு - 15,000

மூன்றாம் பரிசு - 10,000

இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்

வினாக்கொத்துக்கு விடைதந்து

பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!

இன்னும் ஒருசில தினங்களில் முழுவிபரம்!!

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

J/F 021 - 2223916, 0777 - 517019

01-505632, 074-612656, 01-390128

(சி-518)

# கல்விமான் - கல்லூரி அதிபர் - கலாரசிகர்

கல்விமான், கல்லூரி அதிபர், காந்தீயவாதி, சமூகத் தொண்டன், எழுத்தாளர், கலாரசிகர், பக்திமான் போன்ற பல நிலைகளில் நற்பணிகள் பல ஆற்றிய ச.அம்பிகைபாகன் அவர்களின் 16 ஆவது ஆண்டு நினைவு நாள் கொண்டாடப்படும் இவ்வேளையில் அவருடைய பணிகளைப்பற்றி இன்றைய சமுதாயத்தினருக்கு நன்றியுடன் எடுத்துக் கூறுவதை மகிழ்ச்சிகரமான ஒரு கடமையாகவே நான் கருதுகின்றேன்.


ச.அம்பிகைபாகன்

இவருடைய சேவைகள் அனைத்திற்கும் கேந்திரமாக அமைந்தது யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயம். 1935 ஆம் ஆண்டில் அவ் வித்தியாலயத்தின் அதிபராக அம்பிகைபாகன் நியமிக்கப்பட்டபோது, கிட்டத்தட்ட 150 மாணவர்களையும் 07 ஆசிரியர்களையும் கொண்ட கனிஷ்ட இடைநிலைப் பாடசாலையாகவே அது விளங்கியது. முப்பத்து மூன்று ஆண்டுகளாக அதிபராகப் பணியாற்றி 1968ஆம் ஆண்டில் அவர் ஓய்வு பெற்றபோது, 1500 மாணவர்களையும் ஐம்பதுக்கும் மேற்

## மறைந்தார் மாண்பு

பட்ட ஆசிரியர்களையும் கொண்ட முதலாந்தரக் கல்லூரியாக அது திகழ்ந்தது. நீண்ட பாரம்பரியத்தையும், போதிய நிதி வசதியையும், கேட்டாலும் கேட்காவிட்டாலும் தாமாகவே முன்வந்து பல்வேறு உதவிகளையும் வசதிகளையும் செய்யும் மனப்பாங்குமுடைய ஏராளமான பழைய மாணவர்களையும், ஆட்சியிலும் அதிகாரத்திலும் இருப்போரின் "கடைக் கண் பார்வை"யையும் தமக்காக்கிக் கொண்டு விளங்கிய பிரபல கல்லூரிகள் பலவற்றின் மத்தியில் "ஏழை மாணவர்களுக்கென" உருவாக்கப்பட்ட ஒரு வித்தியாலயத்தைக் கட்டியெழுப்புவதென்பது கடினமான காரியம் என்பதைப் பலர் அறிவர். எனினும் அறிவு ஆற்றல், அன்பு, அரவணைப்பு, அர்ப்பணிப்பு, இலட்சியப் பிடிப்பு, இடையறாமுயற்சி போன்ற தன் ஆளுமைகளாலும்,

"இதனை இதனால் இவன் முடிப்பன் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறளின் பொருளை நன்குணர்ந்து, தன் பணியின் பங்காளராக வரித்துக் கொண்ட உதவி ஒத்துழைப்பாலும் கடினமான இப்பணியை மிகச் சுலபமாகவே இவர் செய்து முடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வைத்தீஸ்வர வித்தியாலயத்தை இலக்கிய, கலை, கலாசாரக் கேந்திரமாக ஆக்கியவரும் இவரே. சமய, இலக்கிய மாநாடுகள், இசை நடன நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்துபவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில், வித்தியாலய மண்டபத்தில் அவற்றை நடத்துவதற்குச் சகல வசதிகளையும் இவர் செய்து கொடுத்தார். இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் போன்றோரை வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்கு விஜயம் செய்ய வைத்தவர் இவர். தொ.பொ.மீனாட்சி சுந்தரனார். அ.ச.ஞானசம்பந்தன், கல்கி கிருஷ்ணமூர்த்தி, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை, பெரிய சாமித் தூரன், "தீபம்" பார்த்தசாரதி, மாயாவி, அகரம், ஓவியர் மாலி, எம்.எல். வசந் தகுமாரி முதலிய பலரை நேரிற் காணும் வாய்ப்பை வைத்தீஸ் வரா மாணவர்களுக்கு இவர் ஏற்படுத்திக் கொடுத்தார்.

ஈழகேசரி, வீரகேசரி, இந்து சாதனம், ஈழநாடு, கல்கி, கலை மகள், கிராம ஊழியன் முதலிய ஈழத்து, இந்திய சஞ்சிகைகள், காலத்துக்குக்காலம் வெளிவந்த விசேட மலர்கள், சென்னை, தமிழ வளர்ச்சிக் கழகம் வெளியிட்ட "கலைக்களஞ்சியம்" போன்றவற்றில் இவர் எழுதிய ஆழமும் தெளிவும் ஆதார பூர்வமான தகவல்களும் நிறைந்த கட்டுரைகளும் விமர்சனங்களும் ஈழத்துப் பேனா மன்னர் வரிசையில் இவருக்குச் சிறப்பிடத்தை அளித்தன.

**சி.சரவணபவன் எம்.ஏ.**
(சிற்பி)


## சிறு விளம்பரம்

**வாகனங்கள் விற்பனைக்கு உண்டு**

டாக்டரின் பாவனையிலுள்ள **C90 Honda** மோட்டார் சைக்கிள் மற்றும் **FORD Escort Car** விற்பனைக்கு உண்டு. எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் பின்வரும் இடத்தில் பார்வையிடலாம். **V.**ஜெயக்குமார், 29 செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(216)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த




10.30, 2.30, 6.00, 9.30 (சி-398)
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

## வாசகர்களே, வாடிக்கையாளர்களே!

நமது ஈழநாட்டில் விளம்பரம் செய்வதற்கு உங்களுக்கு அருகிலேயே இனி எமது விளம்பர முகவர்.

## நமது ஈழநாடு விளம்பர முகவர்

பருத்தித்துறையில்

மு.பரமேஸ்வரன்
கங்கை
செய்தித் தொடர்பு நிலையம்
கிராமக்கோட்டுச் சந்தி, புலோலி
பருத்தித்துறை.

தொலைபேசி இல.
021-2263245




# பரபரப்பான ஆட்டத்தில் வி.பி.கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது அவுஸ்திரேலியா!


வெற்றியை இலகுவாக்கிய பிரட் லீ

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நேற்று மெல்பேனில் நடந்த பரபரப்பான இறுதி ஆட்டத்தில் வி.பி.கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணி சுவீகரித்துக் கொண்டது.

வி.பி கிண்ணத்துக்கான முக்கோணப் போட்டிகள் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வந்தன. இறுதிப் போட்டிக்கு தெரிவான அவுஸ்திரேலிய -இங்கிலாந்து அணிகள் நேற்று இரண்டாவது இறுதிப் போட்டியில் பங்குபற்றின.

அவுஸ்திரேலியா நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. அவ்வணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்ரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர்களில் கில்கிறிஸ்ட் 26 ஓட்டங்களையும், மத்யூ ஹேடன் 5 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 69 ஓட்டங்களையும், ஹொக் 8 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 71 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இங்கிலாந்து வீரர் இராஸி 3 விக்கெட்டுகளையும், கடிக் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

230 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி வெற்றி இலக்கை எட்டக் கூடும் என்ற நிலையில் இருந்தது எனினும், அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர் பிரட் லீயின் பந்து வீச்சினால் இங்கிலாந்தின் வெற்றிக் கனவு தகர்ந்தது.

49.3 ஓவர்களிலேயே 224 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இங்கிலாந்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. வகன் 60 ஓட்டங்களையும், ஹுசேன் 28 ஓட்டங்களையும், அலெக் ஸ்ருவர்ட் 60 ஓட்டங்களையும், கொலிவூட் 25 ஓட்டங்களையும், பெற்றனர்.

அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் 18 உதிரி ஓட்டங்களைக் கொடுத்திருந்த போதும் பிரட் லீ 5 விக்கெட்டுகளையும், ஷேன் வோன்


விளாசித்தள்ளிய ஹொக்

2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி வெற்றிக்கு வழிவகுத்தனர்.

இரண்டு இறுதிப் போட்டிகளிலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றதால் வி.பி.கிண்ணம் அவுஸ்திரேலியாவுக்கு வழங்கப்பட்டது.

## உலகவலம்

# நட்பு நாடுகளுடன் ஆராய்ந்துவிட்டே தாக்குதல்



(பேர்ன்)

ஐ.நா.வின் ஆயுதப் பரிசோதகர்கள் தமது அறிக்கையைச் சமர்ப்பித்ததும், அதனைப் பொறுமையாக அமெரிக்கா ஆராய்ந்து, நட்பு நாடுகளுடன் கலந்தாலோசனை நடத்தியதன் பின்னரே பாக்தாத் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பது பற்றி முடிவு எடுக்கப்படும் என அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

சுவிஸ் நாட்டில் வருடாந்த பொருளாதார ஒன்று கூடலில் உரையாற்றும்போதே மேற்படி கருத்தை கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

மேலும், அங்கு அவர் உரையாற்றுகையில்- குறைந்தது பன்னிரெண்டு நாடுகள் ஐ.நா.வின் அனுமதியின்றியே பக்தாத் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க ஆதரவு தரும் என அவர் மேலும் தெரிவித்தார்.


நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
அஜித், விக்ரம், மகேஸ்வரி நடித்த
உல்லாசம்
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
TOMB RAIDER (சி-397)


## இன்றைய நாள் இனிய நாள்

**26-01-2003 - ஞாயிற்றுக்கிழமை**

**திருநீலகண்டர் குரு பூசை**

| | |
|---|---|
| மேடம் | :- பெண்களால் நன்மை, வாகன யோகம், மனமகிழ்ச்சி, குடும்ப சுகம். |
| இடபம் | :- உறவினரால் கவலை, பெரியோர் சந்திப்பு, குடும்ப மனஸ்தாபம் |
| மிதுனம் | :- அதிகாரம், தொழிற் சிறப்பு, தரும காரியம், நற்குணம். |
| கர்க்கடகம் | :- சரீர சுகக்குறைவு, சோம்பல், வாக்குக் கலகம், திருடர் பயம் |
| சிங்கம் | :- சிநேகித நன்மை, பிரயாணத்தால் செலவு, பூமியால் லாபம். |
| கன்னி | :- சௌபாக்கியம், பணவரவு, குடும்பச் சிறப்பு, இனசன கொண்டாட்டம். |

பிரபல சோதிடர்
எஸ்.குகநேசன்

| | |
|---|---|
| துலாம் | :- இனசன விரோதம், மனப் பயம், தொழில் சமபலன், கோபமிகுதி |
| விருச்சிகம் | :- நினைத்த காரிய வெற்றி, புத்திரசுகம், நற்கீர்த்தி, இல்லச் சிறப்பு. |
| தனு | :- வயிற்றில் ரோகம், காரிய தாமதம், பூமி வாகன லாபம், உறவினர் உதவி. |
| மகரம் | :- குடும்ப மகிழ்ச்சி, வாக்கு வசீகரம், களஸ்திர சுகம், அதிக பிரயாசை |
| கும்பம் | :- தேகசுகக் குறைவு, கவலை குடும்ப மனஸ்தாபம், மனபயம். |
| மீனம் | :- உறவினர் வருகை, ஸ்திரீசுகம், பொருள் வரவு, மன மகிழ்ச்சி. |


## மக்கள் வங்கி

**மக்கள் வங்கி பருத்தித்துறைக் கிளை**
**மீட்கப்பெறாத அடகு நகைகள்**
**பகிரங்க ஏல விற்பனை**

**மக்கள் வங்கி பருத்தித்துறைக் கிளையில் 31.12.1984 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 15.02.2003 அன்று முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கியில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.**

**பிராந்திய முகாமையாளர்,**
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
10.12.2002

(சி-523)

# சமஷ்டி அமைப்பே இங்கு பொருத்தம்; ஆராய்ந்து வந்த எம்.பிக்கள் அறிவிப்பு!

## உள்ளக சுயநிர்ணயம் பற்றியும் சிலாகிக்கின்றனர்

(கொழும்பு)

இலங்கைக்குச் சமஷ்டி அரசியல் வழிமுறைகள் மிகவும் பொருத்தமானது என, ஐரோப்பிய நாடுகளுக்கு சமஷ்டி பற்றி ஆராயச் சென்ற அரசாங்கக் கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்குத் திரும்பிய பின்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பொருளாதார கலாசார வளர்ச்சிக்கும், மொழிப்பிரச்சினைக்கும் சமஷ்டி முறையிலான நிர்வாகத்தின் மூலம் தீர்வு காணமுடியும் என்பது இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்தாகும்.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா கொழும்பு வந்து சேர்ந்ததும் கருத்து வெளியிடுகையில்- தாங்கள் விஜயம் செய்த நாடுகளில நிர்வாக அமைப்பு, அவற்றின் அபிவிருத்திக்கு எந்தவகையில் உந்துசக்தியாகவும், அனுசரணையாகவும் இருந்து வந்திருக்கிறது என்பதை நேரடியாகக் காண முடிந்திருந்ததாகத் தெரிவித்தார்.

1970 ஆம் ஆண்டில் உள்ளக சுயாட்சியைப் பெற்ற பெல்ஜியம் அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது என்றும் -

அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக அரசாங்கமும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஒரே கருத்தைக் கொண்டிருக்கின்றன என்று பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

## ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

1992ஆம் ஆண்டில் போட்டிப் பரீட்சை மூலம் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட கணித-விஞ்ஞான ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடலொன்று அடுத்த மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை 12 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்துகொள்வதுடன், இவ்வாசிரியர்களின் நிரந்தர நியமனத் திகதி மாற்றம் தொடர்பான மகஜர் மற்றும் விண்ணப்பங்களில் தனித்தனியாகக் கையொப்பமிட்டு விரைவில் அனுப்பவேண்டியுள்ளதால் தவறாது சமூகமளிக்குமாறு மேற்படி ஆசிரியர்களின் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

# அடுத்த சில வாரங்களில் அரசியலில் முக்கிய திருப்பம்

## ரவூப் ஹக்கீம் எதிர்வு கூறுகிறார்

(கொழும்பு)

அடுத்த சில நாட்களில் நாட்டின் அரசியல் அரங்கில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கிறார்.

புத்தளத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில், அரசாங்கத்தில் முஸ்லிம் காங்கிரஸின் உறுதிப்பாட்டை நிலைநிறுத்திக்கொள்ளும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரித்திருப்பதுடன், கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சினைகளை வெற்றிகரமாகச் சமாளிக்க முடிந்திருப்பதாகவும் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

# காணமற்போன 11 ஆயிரம் பேரை செஞ்சிலுவைச் சங்கம் தேடுகிறது!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த 11 ஆண்டுகளாக 20 ஆயிரம் பேர்வரை காணாமற்போயுள்ளதாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமற்போன 20 ஆயிரம் பேரில் 9 ஆயிரம் பேர் தொடர்பான விபரங்களை இதுவரை கண்டறியப்பட்டுள்ளதாகவும், ஏனைய 11 ஆயிரம் பேரைத் தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை மாவட்டப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

## மணலாறில் ஊடுருவியபோது கைதான

# சிப்பாயின் தடுப்புக்காவல் மேலும் 14 நாட்கள் நீடிப்பு!

(கிளிநொச்சி)

மணலாறுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஊடுருவியபோது கைதாகி - கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இராணுவச் சிப்பாயின் விளக்கமறியல் உத்தரவு மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் இச்சிப்பாய் ஆஜர்படுத்தப்பட்டபோதே இவ்வுத்தரவு வழங்கப்பட்டது.

# நாம் யாருக்கும் கைப்பொம்மையல்ல மங்களவுக்கு ஆனந்தசங்கரி பதில்!

விடுதலைப் புலிகளின் மனிதப் பணயக் கைதிகளாகக் கூட்டமைப்பு இருப்பதாக மங்கள சமரவீர தெரிவித்திருந்த கருத்து ஏற்றுக்கொள்ள முடியாததொன்று எனக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி மங்கள சமரவீரவுக்கு அனுப்பியுள்ள பதிலில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

நமது கட்சி 30 வருடங்களாக ஏற்கனவே வகுக்கப்பட்ட பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. இதில் எமது அடையாளம் பேணப்படுகின்றது.

இணக்கமான அரசியற் தீர்வு ஒன்றை எட்டவே நாம் அனைவரும் ஒன்று திரண்டு பலப்படுத்திக் கூட்டமைப்பை உருவாக்கினோம். இதில் வேறெவரும் சம்பந்தப்படவில்லை. நாம் யாருடைய கைப்பொம்மைகளாகவும் செயற்படவில்லை.

நாம் அரசாங்கத்தைக் குறிப்பிட்ட சில காரணங்களுக்காகவே ஆதரிக்கின்றோம். நாட்டின் சமாதானம் ஏற்படவேண்டும் என்பதற்காக அரசிற்கு ஆதரவளிக்கிறோம். ஆனால் மங்கள சமரவீர கூறுவதுபோல அரசாங்கத்தைக் கண்மூடித்தனமாக ஆதரிக்கவில்லை.

விரைவான இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசுக்கு நாம் ஆதரவ



ளிக்கிறோம். இதனை மங்கள சமரவீர வேறுவிதமாகப் புரிந்து கொண்டிருப்பது நகைப்புக்கிடமானது என்று அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(01)

# கேணல் கருணா – ஒஸ்ரின் சந்திப்பு வவுணதீவில் 30 ஆம் திகதி நடக்கும்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவுக்கும் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணாவுக்கும் இடையிலான சந்திப்பு வவுணதீவில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவிருக்கின்றது. நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்தம் தொடர்பாக இருதரப்பிலும் உள்ள பிரச்சினைகள் குறித்து கருணாவும் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் இச்சந்திப்பின்போது ஆராயவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி ஜேர்மனியில் நடைபெறவுள்ள ஐந்தாவது சுற்றுப் பேச்சுக்களில் சமர்ப்பிப்பதற்காகப் பாதுகாப்பு நிலவரம் தொடர்பான - அறிக்கை ஒன்றை இவர்கள் தயார் செய்வர் எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் வகையில் நடந்து கொள்ளும் படையினர் குறித்து விழிப்புடன் செயற்படுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க படையதிகாரிளுக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# கொழும்பு மேயருக்கு எதிராக ஆளும் கட்சியினரே போர்க்கொடி

கொழும்பு மாநகரசபை மேயர் பிரசன்ன குணவர்த்தனவுக்கு எதிராக, பிரதிமேயர் தலைமையிலான 18 உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

கொழும்பு மாநகரசபையில் எதிர்க்கட்சித் தலைவர் மில்டன் லியனகேக்கு,. கொழும்பு மாநகரசபை மேயர் பிரசன்ன குணவர்த்தன அறை ஒன்றை வழங்கியிருநதார்.

இதற்குப் பிரதிமேயர் அசாத் சாலி தலைமையிலான 18 பேர் கொண்ட மாநகரசபையின் ஐ.தே.க. உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதுடன் பதவிவிலகப் போவதாகவும் அச்சுறுத்தியுள்ளனர். (01)

# யாழில் தேசிய விளையாட்டு விழா 5 கல்லூரிகளில் தெரிவுப்போட்டி!

## இறுதி நிகழ்வு துரையப்பா விளையாட்டரங்கில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 29ஆவது தேசிய விளையாட்டு விழாவை எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகள் தொடர்பாக யாழ். செயலகத்தில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் ஆரம்பமான இக்கலந்துரையாடலில் விளையாட்டமைச்சின் செயலாளர் என்.ஜி.புஞ்சிஹேவா, விளையாட்டுப் பணிப்பாளர் ஏ.ஏ.மில்ரன் அமரசிங்க, அமைச்சின் பிரத்தியேக செயலாளர் ஜெரோம் அமரசிங்க, வடக்கு - கிழக்கு விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளர் கே.வை.விமலராஜன், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, விளையாட்டுத்துறை அதிகாரிகள், அலுவலகர்கள், பாடசாலை அதிபர்கள் கலந்துகொண்டனர்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டு விழாவிற்கான ஆயத்தங்களைச் செய்யும் நோக்கிலேயே இக்கலந்துரையாடல் நடைபெற்றது. விழாவிற்குத் தேவையான உபகரணங்களைக் கொழும்பிலிருந்து கொண்டுவருவது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பரியோவான் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் தெரிவிற்கான விளையாட்டுக்களும், இறுதி விளையாட்டு நிகழ்வு துரையப்பா விளையாட்டரங்கிலும் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ரா)



கரவெட்டிப் பிரதேச சபை சமுர்த்தி வலயக் காரியாலயத்தில் மீளக்குடியேறிய மக்களுக்கான வீட்டு உபகரணங்களை யு.என்.எச்.சி.ஆர். வழங்கியபோது அதனைப் பெறுவதற்காக மக்கள் காத்திருக்கின்றனர். *(படம்: பஞ்சரத்தினம்)*

## நெல்லியடியில் நடந்த அதிர்ச்சிச் சம்பவம்

# பச்சிளம் சிசு கழுத்து நெரிக்கப்பட்டு கொலை; பற்றைக்குள் இருந்து சடலம் கண்டெடுப்பு!

(வடமராட்சி கிழக்கு)

குழந்தை ஒன்று பிறந்தவுடன் கொலை செய்யப்பட்டு பற்றைக்குள் வீசப்பட்ட சம்பவம் நேற்றுமுன் தினம் நெல்லியடியில் நடைபெற்றது.

நெல்லியடி மகாத்மா வீதியிலுள்ள பற்றைக்குள் இருந்த சிசுவின் சடலத்தைக் கண்ட பொதுமக்கள் கிராமசேவக அலுவலர் மூலம் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

நெல்லியடிப் பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்தபொழுது, நாய் ஒன்று சடலத்தைத் தூக்கிச் சென்றதைக் கண்ட பொதுமக்களும் பொலிஸாரும் சடலத்தை நாயிடமிருந்து பறித்தெடுத்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

பருத்தித்துறை பதில் நீதிவான் என்.தங்கராசா விசாரணை மேற்கொண்டு பிறந்தவுடன் கழுத்து நெரிக்கப்பட்டதால் மூச்சுத்திணறி மரணம் சம்பவித்தது என பகிரங்கத் தீர்ப்பு வழங்கிய பதில் நீதிவான்- சிசுவின் கொலைக்குக் காரணமாக இருந்தவர்களைக் கண்டு பிடித்து, பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மந்திகை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி எம்.கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனையை மேற்கொண்டார். (17)

# டச்சு வீதிப் படைமுகாம் அகற்றப்பட்டது; தபாலக வீதிக்கு நகரும் இராணுவம்!

## சாவகச்சேரியில் கூரைகளும் ஏற்றப்படுகின்றன

(சரசாலை)

சாவகச்சேரி டச்சு வீதியில் கடந்த பல வருடங்களாக நிலை கொண்டிருந்த படையினர் அம்முகாமை விட்டு வெளியேறியுள்ளனர்.

சாவகச்சேரி இராமலிங்கம் வீதி, கென்ஸ்மன் வீதி, டச்சு வீதியை இணைக்கும் பகுதியில் 5 வீடுகளில் தங்கியிருந்த இராணுவத்தினரே வெளியேறி தபாலக வீதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுடன் இணைந்துள்ளனர்.

படையினர் நிலை கொண்டிருந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான வீடுகளில் இருந்து படையினர் வெளியேறி - மீளவும் மக்களைக் குடியமர அனுமதிக்க வேண்டும் எனக் கோரியதையடுத்தே படையினர் வெளியேறியுள்ளனர். அவர்கள் வெளியேறும்போது வீடுகளின் கூரைகளையும் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (34)

### நெடுந்தீவு பாரதி வித்தியாலயம் மூடப்பட்டது

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்குப் பகுதியில் இருந்த பாரதி வித்தியாலயம் என்ற தரம் 5 வரையுள்ள ஆரம்பப் பாடசாலை புதிய கல்விச் சீர்திருத்த நடைமுறை மூலம், போதிய மாணவர்கள் இல்லாத காரணத்தினால் மூடப்பட்டுள்ளது.

இப்பாடசாலை கடந்த காலங்களில் நிதி ஒதுக்கீடுகள் மூலம் திருத்தம் செய்யப்பட்டு மெருகூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (113)

### பளை மத்திய கல்லூரிக்கு விஞ்ஞான ஆய்வுகூட பொருட்கள் வந்தன

(பளை)

பளை மத்திய கல்லூரிக்கு ஒரு தொகுதி விஞ்ஞான ஆய்வுகூடப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது மீள அரம்பித்திருக்கும் பளை மத்திய கல்லூரியில் விஞ்ஞான ஆய்வு கூடம் முற்றாகச் சேதமுற்ற நிலையில் இவ் ஆய்வு கூடப் பொருட்களை கிளிநொச்சிக் கல்வி வலயம் வழங்கியுள்ளது. (115)

### குருநகர் பகுதியில் சுகாதார வாரம்

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதியில் அதிகமாகக காணப்படும் சுகாதாரச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சுகாதார வாரம் நேற்று முதல் ஒரு வாரமாக அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது.

யாழ்.மாநகரசபையின் சுகாதாரப் பிரிவினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

ஒரு வாரகாலத்திற்கு இந்தப் பகுதியில் உள்ள கால்வாய்கள் தேங்கியுள்ள கழிவுகளை அகற்றுவதுடன், சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. சுகாதாரப் பழக்கவழக்கங்கள் தொடர்பான கருத்தரங்குகளும் நடாத்தப்படவுள்ளன.

இந்தப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்கள் - பாலர் பாடசாலை உதவியுடன் இந்தச் சுகாதார வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாநகர முதல்வர் தெரிவித்தார். (ச)

## மல்லாகம், அச்சுவேலிப் பகுதிகளில்

# ஈ.பி.டி.பி அலுவலகங்கள் மீது நள்ளிரவில் குண்டுவீச்சு!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மல்லாகம் பிரதேசத்தில் செயற்பட்டுவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேச அலுவலகம் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30மணியளவில் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டதாகவும், இக்குண்டுகள் வீழுந்து வெடித்தமையினால் பணிமனையின் சுற்றுப்புற வேலிகள் எரிந்து நாசமாகியுள்ளதாகவும், எனினும் இச்சம்பவத்தின் போது எவரும் காயங்களுக்கு இலக்காகவில்லை எனவும் - ஈ.பி.டி.பியின் செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலிப் பிரதேச அலுவலகம் மீது நேற்று முன்தினமிரவு 9.00 மணியளவில் கைக்குண்டுகள் வீசப்பட்டதாகவும் இத்தாக்குதலினால் மின்விளக்குகள், யன்னல்கண்ணாடிகள் போன்றவை சேதமாகியுதாகவும் அச்செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்தது.

# பளை மத்திய கல்லூரியில் கழகங்கள் சிரமதானம்

(பளை)

பளை மத்திய கல்லூரி சொந்த இடத்தில் மீள இயங்க ஆரம்பித்ததையடுத்து - அங்கு சில புனரமைப்பு வேலைகளில் புலோப்பளை மேற்கு பிரபாகரன் விளையாட்டுக் கழகம் ஈடுபட்டது.

புதிதாக அமைக்கப்பட இருக்கும் கொட்டகை அமைப்புப் பணியில் - இக்கழக அமைப்பினர் தமது சரீர உதவிகளை வழங்கியுள்ளனர்.

மேலும் பளைப்பிரதேசத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களைப் பாடசாலையின் புனரமைப்புப் பணிகளில் சிரமதான அடிப்படையில் ஈடுபட அழைப்பு விடுக்கப் போவதாகக் கல்லூரி அதிபர் க.குணபாலசிங்கம் தெரிவித்துள்ளார். (113)

# சுகாதாரச் சீர்கேடாக இயங்கிய 3 கடைகள் மந்திகையில் சீல்வைப்பு

## சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை

(புலோலி)

பருத்தித்துறைப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடான முறையில் இயங்கிய மூன்று சிற்றுண்டிச்சாலைகள் சீல் வைத்து மூடப்பட்டன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக இயங்கிய மூன்று கடைகளும் சுகாதாரச் சீர்கேடான முறையில் இயங்கியதையடுத்து, அப்பகுதிக்குச் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மூன்று மாத காலத்திற்குள் கடையைச் சீர்செய்யுமாறு பணித்தார்.

எனினும் அவற்றைச் சீர் செய்யாத காரணத்தினால் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவானின் உத்தரவின்படி நேற்றுப் பொலிஸாரின் பாதுகாப்புடன் பருத்தித்துறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கடைக்கு சீல் வைத்து மூடியுள்ளார்.

அண்மைக்காலமாகத் தொற்று நோய்களின் பரவல் வேகம் அதிகரித்து வந்தமையையடுத்து பருத்தித்துறை சுகாதாரப்பிரிவு பல்வேறு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சின்னஞ் சிறு செய்திகள்

### ஆரியகுளம் சந்தியில் உடைந்த மதகால் போக்குவரத்துச் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆரியகுளம் சந்தியின் கீழுள்ள மதகு உடைந்த நிலையில் காணப்படுகிறது.

இதனால் மிகவும் நெருக்கடியான இவ்வீதியூடாக சைக்கிள், வாகனங்களில் செல்லும் மக்கள் மிகவும் சிரமப்பட்டு தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

### பாடசாலை மாணவரிடம் கைக்குண்டு மீட்பு

(கொழும்பு)

கைக்குண்டுடன் பாடசாலை மாணவர் ஒருவரை அங்குண கொலபெச பொலிஸ்ார் கைது செய்துள்ளனர்.

இந்த மாணவன் கைது செய்யப்பட்ட வேளையில் மற்றொரு நபரும் இருந்ததாகவும் அவர் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்

தப்பிச் சென்றவர் விட்டுச்சென்ற துப்பாக்கி ஒன்றும் ரவைகளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவிடம் ஆயுதங்கள் எவ்வாறு வந்ததென்பது பற்றி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் காலை 10.00மணிக்கு பணிமனைக் கூட்டமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (113)

### பல்கலை அனுமதிபெற்ற மத்திய கல்லூரி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியில் 1999, 2000, 2001 ஆண்டுகளில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற அனைத்துப் பிரிவு மாணவர்களையும் எதிர் வரும் 30 ஆம் திகதி, வியாழக் கிழமை காலை 10 மணிக்கு, கல்லூரி சஞ்சிகை விடயமாக- முக்கியமான கலந்துரையாடலுக்காகக் கல்லூரிக்குச் சமூகந்தருமாறு அதிபர் கேட்டுள்ளார்.

### வறிய மாணவர்களுக்கு வடமராட்சியில் உதவி

(வடமராட்சி)

வடமராட்சிப் பாடசாலைகளில் உள்ள வறிய மாணவர்களை தெரிந்து அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

வடமராட்சிப் பிராந்திய "வித்து" மாணவர் சஞ்சிகையின் கல்விப் பிரிவும், சமூகசேவைப் பிரிவும் கொடி வாரம் ஒன்றைப் பிரகடனப்படுத்தி, மாணவர்களிடம் இருந்து கிடைக்கும் பணத்தில் பாடசாலை ரீதியாக வறிய மாணவர்களை தெரிந்து, அவர்களின் கல்வியை ஊக்கப்படுத்தும் விதத்தில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

### சமுர்த்தி உத்தியோகத்தர் தினக்குறிப்பேட்டில் தமிழ்ப் பிழைகள்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட 2003ஆம் ஆண்டுக்கான கடமைத் தினக் குறிப்பேட்டில் உள்ள சத்தியப்பிரமாணம் மற்றும் தகவல்களின் தமிழ் மொழிபெயர்ப்புக்களில் ஏராளமான எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றது. (113)


## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் : சி.வேணுகா

முகவரி : 386/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நான்காவது அகவையில்



பெயர் : ஜெ.அனுஜா

முகவரி : பூதராயர் கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------

பெற்றார் ஒப்பம்

# கனவான்கள் ஆட்டம்

## விளையாட்டு அரங்கம்

இரண்டு இலங்கையர்கள் அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைப் பத்திரிகை ஒன்றுக்குக் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார்கள். கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் மட்டுமன்றி பொதுவாகவே மானிடர்கள் எல்லோரையுமே வெட்கப்பட வைத்த ஒரு சம்பவத்தைப் பற்றியே


முரளி

அவர்கள் எழுதியுள்ளார்கள். இந்த நூற்றாண்டிலும் நிற வெறியா? நிற மேலாதிக்கமா? என்று எல்லோருமே மனம் குமுறுகிறார்கள்.

வெள்ளைத்தோல் இல்லாத காரணத்தால் இலங்கை - அவுஸ்திரேலியாவில் பட்ட அவமானங்கள் அதிகம்தான். 1995/96 இல் உலகின் புகழ்வாய்ந்த பந்துவீச்சாளர் மக்ரா, சனத் ஜயசூரியாவை A BLACK MONKEY என்று கொச்சைப்படுத்தியுள்ளார். இதுபற்றி இலங்கை அணியின் முகாமைக் குழுவினர் உத்தியோகபூர்வ எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லையென்றும், பின்னர் மக்ரா இப்படியொன்றும் நடக்கவேயில்லை என்று மறுத்துவிட்டதாகவும் குறிப்பிடுகிறார்கள் கட்டுரை ஆசிரியர்கள்.

1999 இல் இலங்கைக்கான அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம் தொடங்கச் சில காலமே இருந்தவேளையில் இலங்கையில் ஒரு குண்டுத் தாக்குதலில் ஐம்பது பேர் வரையில் கொல்லப்பட்டிருந்தனர். இது பற்றி அவுஸ்திரேலிய அணியின் சிரேஷ்ட வீரர் ஒருவர் ஒரு அவுஸ்திரேலிய வானொலிக்கு அளித்த பேட்டியில், இன்னும் கொழும்பில் குண்டுகள் வெடித்தால் தாங்கள் விளையாடுவதற்காக இலங்கைக்குப் போகவேண்டியிராது என்று குறிப்பிட்டதாகக் கூறுகிறார்கள் கட்டுரை ஆசிரியர்கள். இவர்கள் இதுபற்றி அனுதாபம் கூடக் காட்டாதவகையில் அப்படியானதொரு கருத்தை வெளியிட்டமை எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்ளத்தக்கது என்று வினா எழுப்புகிறார்கள்.

இதெல்லாம் நடைபெற்றுமுடிய இன்னொரு வேதனையான செய்தி. ரஸல் ஆர்னல்டின் திறமையான களத்தடுப்பால் ரன்அவுட் ஆன டரன் லீமன் தமது DRESSING ROOM இற்கு வரும்போது இலங்கை அணியினருக்கும் கேட்கக்கூடியதாக BLACK B......S என்றொரு அசிங்கமான வார்த்தைப் பிரயோகம் செய்திருக்கிறார். இது தொடர்பில் ஆட்ட மத்தியஸ்தர் கிளைவ் லொயிட் இடம் புகார் கொடுக்கப்பட்டது. இருந்தபோதிலும் லீமன் உடனடியாகவே மன்னிப்புக் கடிதம் கொடுத்ததாகவும், அதோடு அதிகூடிய தண்டனை இதற்காக விதிக்கப்படுமாயின் லீமன் தொடர்ந்து எட்டு ஆட்டங்களில் கலந்துகொள்ள முடியாது தடைசெய்யப்படுவார் என்பதால்- இலங்கை அணியினர் 'மறப்போம், மன்னிப்போம்' என்றவாறாக விடயத்தைக் கைவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், ICC இந்த விடயத்தில் எடுத்த நடவடிக்கை நிச்சயம் பாராட்டுப்பெறும். ICC உயர் அதிகாரி மல்கம் ஸ்பீட் ACB யிடம் இது பற்றிய அறிக்கையை எதிர்பார்த்தபோது ACB சமாளிக்க முனைந்திருக்கிறது. ஆனால், ICC கடுமையாக நின்று ஐந்து ஒருநாள்

# MINUS கங்காருஸ்

ஆட்டங்களில் டரன் லீமன் விளையாடுவதில் இருந்து தடை விதித்துள்ளது. எது எவ்வாறாயினும், டரன் லீமன் போன்றவர்கள் எவ்வளவு குரூரமானவர்களாக இருக்கிறார்கள். இத்தகைய நாகரிகமற்ற வார்த்தை (BLACK) இவர்களின் வாயால் வருவதென்றால் எந்தளவு தூரம் நிறவாதம் இவர்களின் இரத்தத்தில் ஊறியிருக்கிறது என்று ஊகித்துக்கொள்ளலாம்.

கட்டுரை ஆசிரியர்கள் இப்படியான குறுகிய மனம் கொண்டவர்கள் ஒரு சிலரே என்று கூறி, நல்ல மனம் கொண்ட அவுஸ்திரேலியர்கள் அமைதியாகவே இருந்து விடுகிறார்கள் என்கிறார்கள். அதாவது "மௌனமான பெரும்பான்மையினர்" என்று அடைமொழி கொடுக்கிறார்கள் அவர்கள்.


டரன் லீமன்

இந்தச் சம்பவம் பற்றித் துன்பங்களின் ஊடே இன்னும் வேறுசில விடயங்களை அசைபோட்டுப் பார்க்கலாம். ஏறத்தாழ மூன்று தசாப்தங்களுக்கு முன் இங்கிலாந்து அணியின் ஒரு வீரர் பேசில் டி ஒலிவேரா. இவர் தென்னாபிரிக்கக் கலப்பினத்தவர். தென்னாபிரிக்காவிற்கான இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சுற்றுப் பயணம் தொடர்பில் பேசில் டி ஒலிவேரா இல்லாத அணியே தென்னாபிரிக்காவிற்குள் அனுமதிக்கப்படும் என்று அப்போதைய வெள்ளைவெறி ஆட்சியாளர்கள் மிகக் கடுமையாக நின்றார்கள். இங்கிலாந்து மசிந்து கொடுக்கவில்லை. கொள்கை மாறவில்லை. சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டால் ஒலிவேராவும் இருப்பார். இல்லாவிட்டால் சுற்றுப்பயணமே தேவையில்லை என்றவர்கள் இறுதியில் ஒலிவேரா விற்காக தென்னாபிரிக்கச் சுற்றுப்பயணத்தையே ரத்துச் செய்துவிட்டார்கள். இங்கிலாந்தை இன்றும் பாராட்டத் தோன்றுகிறதல்லவா.

இன்னொரு சம்பவம்- நிறவெறித் தென்னாபிரிக்கா சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டிருந்த காலம். இதனால் டெஸ்ட் பந்தய நாடுகளின் அனுமதி, அங்கீகாரம் இன்றித் திறமைவாய்ந்த அணிகளைப் பெரும் பணம் கொடுத்துத் தம் நாட்டுக்கு தென்னாபிரிக்கா அழைத்த காலம். இந்தக் காலப்பகுதியில் இங்கிலாந்து அணி விலைபேசப்பட்டபோது அதன் முக்கிய வீரர், என்றும் புகழ் பெறும் இயன் பொத்தம், இவர் மில்லியன் கணக்கில் விலை பேசப்பட்டார். ஆனால், இயன் பொத்தம் அந்தப் பணக்குவியலை மறுத்ததுடன், நான் இப்படியொரு காரியம் செய்தால் என் அருமை நண்பன் விவியன் றிச்சர்ட்சின் (மேற்கிந்திய கறுப்பின வீரர்) முகத்தை எவ்வாறு பார்ப்பேன் என்றார். மக்ராக்கள், லேமன்களையிட்டு மனம் நொந்து துயரப்படும்போது இயன் பொத்தம் போன்ற வெள்ளை இன வீரர்கள் மனதில் தோன்றுவது எம்மைச் சாந்தப்படுத்துவதாக இருக்கின்றதல்லவா?

மீண்டும் அவுஸ்திரேலியாவின் பக்கம் பார்த்தால் அவர்கள் அவுஸ்திரேலியாவின் மண்ணின் மைந்தர்களையே மொட்டிலே கருக்கியவர்கள் என்பதற்குக்கூட ஒரு உதாரணம் உண்டு. டொன் பிரட்மன் ஒரு ஓட்டமும் பெறாது (DUCK) அவுட்டாக்கியவர் ஆகப் பதினைந்து பேர் மட்டுமே. அதிலே ஒருவர் வேகப்பந்து வீச்சாளர் எடி கில்பேர்ட். இவர் அவுஸ்திரேலியாவின் மண்ணின் மைந்தர். அதாவது ABORIGINE. இவருக்கும் முரளிக்கு நேர்ந்தது போலவே நேர்ந்தது. ஒரு வேகப் பந்துவீச்சாளருக்கு இருக்கவேண்டிய அத்தனை திறமைகளும் இருந்தன. ஆனால், அவரிடம் இருந்த ஒரு தகுதிக் குறைவு அவர் ஒரு அவுஸ்திரேலியப் பூர்வகுடி. இந்த ஒரு காரணத்துக்காகவே அவர் ஓரங்கட்டப்பட்டு அவுஸ்திரேலிய அணியில் இறுதிவரையில் சேர்த்துக் கொள்ளப்படவேயில்லை. 1930 களில் நடைபெற்ற இச்சம்பவம் எடி கில்பேட்டின் பக்கம் எம் உணர்வுகளைக் கொண்டு செல்கிறதல்லவா?

உலகில் விளையாட்டுத்துறையின் மகத்துவம் காலங்காலமாகப் போதிக்கப்பட்டுத்தான் வருகிறது. எனினும், சர்வதே


மக்ரா

சத்திரத்தில் நாற்றமெடுக்கும் நிகழ்வுகள் நடைபெறும்போது மனதில் வேதனை உணர்வு வேகவைப்பதைத் தடுக்க முடியவில்லை.

இருந்தும் ஒன்றை எண்ணி ஆறுதல் அடையலாம். இத்தகைய மூன்றாந்தர நபர்கள் விளையாட்டு உலகில் ஒரு சிலரே. அவர்களால் உன்னதமான கிரிக்கெட் விளையாட்டுக்களுக்கு என்றுமே கறைபூச முடியாதென்பதே அது.


**- நிர்மலன்.**

★

# அற்புதமான வீரனுக்கு ஒரு அஞ்சலி

**தெ**ன்னாபிரிக்க நாட்டில் நெல்சன் மண்டேலாவிற்கு அடுத்தபடியாகக் கணிப்புப் பெற்றவரும், பிரபல்யம் நிறைந்தவருமாக இருந்தவர் இவர்தான் என்கிறார் ஒரு கிரிக்கெட் விமர்சகர். நெல்சன் மண்டேலாவிற்கு அடுத்தபடியாக வைத்து எண்ணப்பட்ட அந்தக் கிரிக்கெட் வீரர் இன்று இவ்வுலகில் இல்லை. அவர்தான் சமீபத்தில் விமான விபத்தொன்றில் உயிரிழந்த முன்னாள் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணித் தலைவர் ஹான்சி குறோனிஞே. அவராகத் தன்வாழ்வில் ஏற்படுத்திக்கொண்ட விபத்து அவரது உன்னத கிரிக்கெட் வாழ்வைப் பறித்தது. எதிர்பாராத விமான விபத்து அவரின் உயிரைப் பறித்தது. இரண்டுமே ஹான்சி குறோனிஞேவிற்கு உயரத்திலே தான் நடைபெற்றன.

நீண்டகால இடைவெளியின் பின்னர் 1992 இல் தென்னாபிரிக்கா ஐ.சி.சியில் மீண்டும் சேர்க்கப்பட்டு டெஸ்ட் அந்தஸ்துப் பெற்றது- தென்னாபிரிக்காவின் மிக முக்கிய நிகழ்வுகளின் ஒன்றாக இருந்தால்- அதைத் தொடர்ந்து ஆட்ட நிர்ணயச் சதியில் இவர் ஈடுபட்டு கிரிக்கெட்டுக்கும், நாட்டுக்கும் செய்த தவறு இரண்டாவது மிகப் பெரிய நிகழ்வாகக் கருதப்பட்டது. இது தென்னாபிரிக்க மக்களின் ஆத்மாவில் விழுந்த அடியாகிவிட்டது. தன் சொந்தப் பிராந்தியமான ஒரேஞ்ச் பிறிஸ்ரேட்டிற்கு 21 வயதில் தலைமை தாங்கிய



ஹான்சி 25 வயதில் தென்னாபிரிக்க அணியின் தலைமைப் பதவிகளுக்கு நியமனம் பெற்றார். ஹான்சி- 1996 மற்றும் 1999 உலகக் கிண்ணப் போட்டிகளில் தென்னாபிரிக்க அணிக்குத் தலைமை தாங்கியவர். ஆனால், இரண்டு முறையும் அரை இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற நூலிடையில் தவறியவர். இவர் விளையாடிய 68 டெஸ்ட் ஆட்டங்களில் 53 டெஸ்ட் ஆட்டங்களில் அணித்தலைவராக விளங்கியவர். அதில் 27 இல் வென்றவர். ஒரு நாள் சர்வதேசப் போட்டிகள் என்றவகையில் 5,565 ஓட்டங்கள் மற்றும் 118 கிரிக்கெட்டுக்கள் பெற்றவர். இவரது முதல்தரக் கிரிக்கெட் போட்டிகளில் பெறற ஓட்ட எண்ணிக்கை 12,103. பொதுவாக ஒரு நாள் போட்டிகளில் பெற்ற ஓட்ட எண்ணிக்கை 9,855. இப்படியாக இவரது இடையில் முறிந்துபோன சாதனைப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

ஆனால், இடையில் ஏற்பட்ட பந்தய நிர்ணயக்காரர்களின் உதவி இவரை அவமானச் சேற்றில் தள்ளிவிட்டது. இறுதியில் UCB யால் கிரிக்கெட் விளையாடுவது மட்டுமன்றி அது தொடர்பான எந்தச் செயற்பாட்டிலும் ஈடுபடுவது இவரைப் பொறுத்துத் தடை செய்யப்பட்டது. இவர் தன்னை விசாரித்த குழுவின் முன் சாட்சியமளிக்கையில் "நான் உண்மையான கிறிஸ்தவனாகத் தேவன் காட்டிய வழியில் வாழமுயன்றேன். ஆனால், என் பாதையைச் சாத்தான் நிர்ணயிக்க அனுமதித்துவிட்டேன்" என்று தன்னையுணர்ந்து மனம்நொந்து கூறினார்.

இவர் தனது 32 வயதில், கடந்த வருடம் விமானவிபத்தில் சிக்கி உயிரிழந்தபோது அனுதாப அலை பெருகியது. அஞ்சலிச் செய்திகள் குவிந்தன. "இதோ ஒரு இளைஞன். தன்வாழ்வில் ஏற்பட்ட பின்னடைவின் பின்னர், உண்மையாகவும் கௌரவமாகவும் தன் வாழ்க்கையை மீளக்கட்டியவன். இந்த நடைமுறையை அவன் செயற்படுத்திய விதம் தாழ்நிலையில் உயர்ந்து செல்வதற்கான ஒரு முன் உதாரணமாகவே இருந்தது" என்று புகழஞ்சலி செலுத்தினார் நெல்சன் மண்டேலா.

**- நிமலா.**

உண்மையாகவே ஹான்சி குறோனிஞே கிரிக்கெட் ரசிகர்களின் பெருமதிப்பைப் பெற்றிருந்தார். இவர் அவமானச்சேற்றில் விழுந்தபோது கூட இவர் ஏன் இப்படிச் செய்தார் என்ற கோபம் ஏற்பட்டதைவிட இவருக்கு என்னவாயிற்று என்ற அங்கலாய்ப்பே மேலோங்கி நின்றது.

எனினும், இந்த உலகக்கோப்பைப் (2003) போட்டிகளில் ஹான்சி இல்லாதது நிச்சயமாக இருந்தாலும், அதையும் விட மேலாக அவரின் இவ்வுலக இருப்பே இல்லாமல் போனது மிகவும் வேதனையானது. நாங்கள் கிரிக்கெட் ரசிகர்கள், ஹான்சியின் ஆன்மா நித்திய இளைபாற்றையடைய இறைவனைப் பிரார்த்திப்போம். ▼

# மேற்கிந்தியத் தீவுகள் அணி:


கிரிக்கெட் என்றால் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகள்தான் என்று இருந்த காலம் மாறி முதன்முதலில் கறுப்பினத்தவர்கள் கிரிக்கெட் விளையாட்டில் கொடிகட்டிப் பறந்தார்கள் என்று சொன்னால் அது மேற்கிந்தியத்தீவுகள் அணிதான். சடுதியாக உலகக் கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் ஒரு பரபரப்பை ஏற்படுத்திய கறுப்பினக்காரர்கள் இவர்கள். பலமுறை உலகக் கிண்ணத்தை வென்றவர்கள், வேகப்பந்து வீச்சின் பிதாக்கள், ரன் குவிக்கும் இயந்திரங்கள் என்றெல்லாம் வர்ணிக்கக் கூடியளவுக்கு ஆடியவர்கள். ஆனால் ரிச்சி ரிச்சட்சனின் தலைமைக்குப் பிறகு தொடர் தோல்விகளைச் சந்தித்து வந்தார்கள். இவர்களுடைய இறுதிச் சாதனை ஒரு தனி மனித சாதனை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் Brian Lara வின் அதிகூடிய டெஸ்ட் ஓட்டம் இங்கிலாந்துக்கெதிராகப் பெறப்பட்டது. இதற்குப் பிறகு இவர்களுடைய சாதனை என்று குறிப்பிடும்படி ஒன்றும் இல்லை என்றே கூறலாம்.

நாங்கள், கடந்தகால மேற்கிந்திய அணியினர் சிலரை எடுத்து நோக்குவோம். (1975 - 1979) டெஸ்ட்மன்ட் ஹெயின்ஸ், றோய் பிரெட்கிக்ஸ்,



கிறிஸ் கைல்

# திறமை போனஸ் LARA



ஜோல் கானர், கொலின் குரொவ்ட், மைக்கல் ஹோல்டிங், அன்டி ரோபர்ட்ஸ்.

கோர்டன் கிறினிச், அல்வின் காளிச்சரண், கிளைவ் லொயிட், விவியன் ரிச்சர்ட்ஸ், மைக்கல் கோல்டிங், றோகன் கனாய், அன்டி ரோபர்ட்ஸ், கொலின் குரொவ்ட், ஜோல் கார்னர், டெறிக் மர்ரே.

- என திறமைவாய்ந்த பல வீரர்களைத் தன்னகத்தே கொண்டிருந்த மேற்கிந்திய தீவகள் அணி கடந்த உலகக் கோப்பைப் போட்டிகள் போல இம்முறையும் செத்த பாம்புதான் என்று இருந்தவேளையில்தான், இந்தியாவில் கடைசியாக நடைபெற்று முடிந்த ஒருநாள் போட்டித் தொடரில் இந்தியாவைச் சொந்தமண்ணிலேயே தோற்கடித்ததன் மூலம்- இந்த உலகக் கோப்பை போட்டியிலேயே தங்களையும் மறக்க வேண்டாம் என கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு போடு போட்டிருக்கிறார்கள்.

தற்போதைய இவர்களுடைய அணியை எடுத்து நோக்கினால்- பிரைன் லாறா, வவல் ஹைன்ட்ஸ், கிறிஸ் கைல், ரிக்காடோ பவல், ராம்நரேஷ் சர்வான், மார்லன் சாமுவேல்ஸ், பேட்ரு கொலின்ஸ், நட்லி ஜேக்கப்ஸ், கார்ல் ஹுப்பர், சிவ்நாராயண் சந்தர் போல், மேவின் டிலான், காலிமோர், ஜேர்மயின் லோசன் எனத் திறமை வாய்ந்தது இந்த அணி.

இந்த அணி, பழைய மேற்கிந்தியத்தீவுகள் அணியை ஒருகணம் எங்கள் மனக்கண்முன் கொண்டுவருகின்றது. இறுதியாக நடைபெற்ற இந்தியாவுக்கெதிரான ஒருநாள் போட்டி ஒன்றில் சர்வான் அடித்த சதம் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் நட்சத்திர வீரர் விவியன் ரிச்சர்ட்ஸினை நினைவுகூரத்தக்கவாறு இருந்தது. இதிலே ஒரு அருமையான நிகழ்வு என்னவென்றால்- இந்தப் போட்டியை பவிலியனில் இருந்து விவியன் ரிச்சர்ட்ஸ் கண்டு மிகவும் புளகாங்கிதம் அடைந்ததுதான். இந்தப் புதிய அணி இந்தியாவைச் சொந்த மண்ணிலே வைத்து ஒரு நாள் போட்டித் தொடரில் துவம்சம் செய்தபின்பு அண்டை நாடான பங்களாதேஷ் அணியினை டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் வெற்றி வாகை சூடியதை மறக்கமுடியாது. இப்போது இந்த அணி ஒரு சிக்கலை எதிர்நோக்கியுள்ளது. என்னவென்றால்- காயம் காரணமாக நீண்ட ஓய்வில் இருந்து தற்போது களம் இறங்கத் தயாராக உள்ள பிரைன் லாராவை அணியில் சேர்த்தால் அணியை விட்டு யாரை நீக்குவது என்ற சிக்கல் தோன்றியமைதான். இந்த அணிக்குள்ள திறமையுடன் சேர்த்து போனஸாக லாராவும் வந்தால் உலகக்கோப்பைப் போட்டித் திருவிழாவில் விசேட மேளக்கச்சேரிக்குக் குறைவில்லை. அத்துடன், காலங் காலமாக வேகப் பந்துவீச்சினை மட்டுமே நம்பிக் கள



லோசன், சர்வான், ஹுப்பர்.

மாடும் மேற்கிந்திய அணிக்கு தென்னாபிரிக்க ஆடுகளங்கள் இனிப்பான அல்வாக்கள்தான். எது எவ்வாறிருப்பினும் இம்முறை மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சவாலைச் சமாளிக்க மற்ற அணிகள் தயாரா? என்பது கேள்வியே. பொறுத்திருந்துதான் பார்ப்போமே!


- பி.என்.எஸ்.



சச்சின் இல்லாத இந்திய அணியை கற்பனை செய்து பார்க்க முடிகிறதா..?

# உதிரிகள் தான் அணியா?

மக்ராவும், ஷேன் வோனும் இல்லாத அவுஸ்திரேலிய அணி எவ்வாறு இருக்கும். சர்வதேச கிரிக்கெட் சமூகம் ஏதோ திடீரென்று விழித்துக் கொண்டு கேள்வியை எழுப்புகிறது. இங்கிலாந்திடம் அவுஸ்திரேலியா இவ்விருவரும் பங்கேற்காத நிலையில் ஏற்பட்ட தோல்வி இப்படி ஒரு விழிப்பை ஏற்படுத்தியுள்ளது. அப்படியாயின்- இவர்கள் இருவரும் இல்லாத உலகக் கிண்ணப் போட்டிகள் எவ்வாறு இருக்கும். விமர்சகர்கள் இவர்கள் இருவர் மீதும் வைத்திருக்கின்ற பெரும் நம்பிக்கையின் அளவை ஏனைய பந்து வீச்சாளர்கள் மீது வைக்கவில்லைப் போலத் தெரிகின்றது. அப்படியாயின் இந்த இருவரும் அவுஸ்திரேலியாவிற்காக விளையாடாத பட்சத்தில் உலகின் முதன்மை நிலையை அவுஸ்திரேலியா இழந்துவிடுமா. இது ஆரோக்கியமானதொரு நிலை என்று கூறமுடியாது. ஆனாலும் ஸ்டீவ் வோ போன்றவர்களே அதுதான் யதார்த்தம் என்பது போலக் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரையும் உலகக் கிண்ணப் போட்டிகள் வரை கவனமாகப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்கிறார் அவர். இவர்களைக் கூடுதலாகக் களைப்படையச் செய்யும் வகையில் விளையாட்டில் ஈடுபடுத்தக் கூடாது. அவர்களைக் கவனமாக முகாமைத்துவம் (Man Management) செய்ய வேண்டும் என்கிறார். ஏனைய பந்து வீச்சாளர்களுக்குக் குறிப்பாக அவுஸ்திரேலியா வேகப் பந்து வீச்சாளர்களுக்கு இந்த விளக்கம் அவ்வளவு ரசனைக்கு உரியதாக இருக்காதுதான்.



ஷேன் வோன்

- கண்ணா.

# வங்கத்தின் சிங்கங்கள்

இலங்கைத் தீவின் கிரிக்கெட் காய்ச்சலுக்கு மத்தியில் துரதிஷ்டவசமாகப் பெருமளவில் கண்டும் காணாமலும் போய்விட்ட மூன்றாவது SAFF தென்னாசிய உதைபந்தாட்டப் போட்டிகள் பங்களாதேஷில் நடைபெற்று முடிவடைந்துள்ளன. பிரிவு Aயில் பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, ஆப்கானிஸ்தான் ஆகியனவும், பிரிவு Bயில் வங்காள தேசம், மாலைதீவுகள், நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளும் இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டிருந்தன.

முதல் சுற்றுப் போட்டிகள் முடிவடைந்தபோது A பிரிவின் முதல் இரண்டு இடங்களையும் முறையே- பாகிஸ்தான், இந்திய அணிகள் பெற்றுக் கொண்டன. இதேவேளை B பிரிவில்- முதலிரண்டு இடங்களையும் வங்காள தேசம் மற்றும் மாலைதீவுகள் அணிகள் பெற்றுக் கொண்டன. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற அரை இறுதி ஆட்டங்களில், முதலாவதில் பாகிஸ்தான், மாலை தீவுகள் அணியைச் சந்தித்தது. 1 : 0 என்றவாறு மாலைதீவுகள் அணி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. இன்னொரு அரை இறுதி ஆட்டத்தின் 2 : 1 என்றவாறு இந்தியாவை வங்காளதேசம் வெற்றிகண்டது.

இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்ற வங்காளதேசம் மற்றும்




அஷ்ரப் லுத்வியைத் (மாலைதீவு) தடுத்து பந்தைப் பறிக்க முயலும் ஆரிவ் கான் (வங்காள தேசம்).

மாலைதீவு அணிகள் 50,000 ரசிகர்கள் முன்னிலையில் டாக்காவில் 'வங்க பந்து' விளையாட்டாரங்கில் மோதிக் கொண்டார்கள். ஆட்ட நிர்ணய நேரத்தில் இரு அணிகளுமே சளைக்காது போராடி யாருக்குமே வெற்றி கிடைக்காமல் பாதுகாத்துக் கொண்டார்கள். அதாவது ஒன்றுக்கு ஒன்று என்றவாறு சமன் செய்து கொண்டார்கள். எனவே மேலதிகமாக இன்னும் 30 நிமிடங்கள் ஒதுக்கப்பட்ட போதும் அந்தப் பொன்னான முப்பது நிமிட நேரத்தில் GOLDEN GOAL ஒன்று பெறப்பட முடியாது போயிற்று. எனவே வழமையான பாணியில் 'எல்லாப் பொறுப்பும் உனக்கே' என்று பெனால்டி முறையில் இரண்டு கோல்காப்பு வீரர்களிடம் பாரிய சுமையை ஏற்றிவிட்டார்கள். இறுதியில் 6 : 4 என்றவாறு வங்காள தேச அணி 3 ஆவது SAFF வெற்றிக் கிண்ணத்தைத் தமதாக்கிக் கொண்டார்கள்.

- வாமஜெயா.

# மாற்ற முடியாதது

VB முக்கோண ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இங்கிலாந்து- இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டியொன்றில் வெற்றி வாய்ப்பை இழந்ததன் மூலம் ஓரளவில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறும் சந்தர்ப்பத்தை இலங்கை இழந்தது உண்மை. எனினும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற அவுஸ்திரேலிய-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டியின் போக்கு மற்றும் முடிவு இலங்கை அணி இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகும் சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கக்கூடும்.



அதாவது, இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இந்த வெற்றி இலக்கையடைய அவுஸ்திரேலிய அணிக்கு 47.3 ஓவர்கள் தேவைப்பட்டதானது பல சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது. ஏனெனில் அவுஸ்திரேலியா தனது இலக்கை 40 ஓவர்களுக்குள் பெற்றிருந்தால் - அதாவது சராசரியாக ஓவருக்கு 4 ஓட்டங்கள் பெற்றிருந்தால் - இங்கிலாந்து அணிக்கான போனஸ் புள்ளி இழக்கப்பட்டிருக்கும்.

# எதுவுமே இல்லை

அதேவேளை, அடுத்த ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை இலங்கை வென்றிருந்தால் இறுதி ஆட்டத்துக்கு இங்கிலாந்து அன்றி இலங்கை தகுதி பெற்றிருக்கும். ஆனால்- இலங்கை அப்படியான சந்தர்ப்பம் பற்றியெண்ணியும் விடக்கூடாது என்கிற ஒரு நோக்கிலேயே மகத்தான அவுஸ்திரேலிய அணி 153 ஓட்டங்களைப் பெற இத்தனை ஓவர்களைச் செலவழித்ததா என்ற நியாயபூர்வமான ஐயப்பாடு ஒன்று எழுந்துள்ளது. மத்தியூ ஹேடனும், ரிக்கி பொண்டிங்கும் அணியில் இல்லை என்றபோதே அவுஸ்திரேலிய அணியின் எண்ணம் தெளிவாகிவிட்டது என்கிறார்கள் நோக்கர்கள். சிலவேளை டரன் லீமன் மீது ஏற்பட்ட அவதூறு தண்டனை என்பவற்றால் இலங்கை அணி மீதான வெறுப்பு இப்படியான நோக்கிற்கு இட்டுச் சென்றிருக்குமோ என்ற சிந்தனையையும் தோற்றுவிக்கின்றது. எனினும் அணித் தலைவர் அடம் கில்கிறிஸ்ட் அந்த ஆடுகளம் ரன் சேகரிக்க வாய்ப்பான தல்ல என்று ஒரு சாலஜாப்புக் கூறியிருக்கிறார்.

இது ஒருபுறம் இருக்க VB போட்டியின் BEST OF THREE இன் முதல் ஆட்டத்தில்- ஆக 117 ஓட்டங்களுக்கு இங்கிலாந்தைச் சுருட்டிய அவுஸ்திரேலியா, இந்த இலக்கையடைய எடுத்துக் கொண்ட ஓவர்கள் 12.2 மட்டுமே. கில்கிரிஸ்ட் 37 பந்துகளில் 69, ஹேடன் 37 பந்துகளில் 45 என்று நொருக்கித் தள்ளினார்கள். அருமையான வெற்றி. அவுஸ்திரேலியாவிற்குப் பாராட்டுக்கள். அதேவேளை, முன்னதாக விபரிக்கப்பட்ட விடயங்கள் எங்கோ உதைக்கிறதே ஏன்? இலங்கை அணி மீது பயமா? கோபமா?

-தே.செந்தூரன்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்*
*எய்துவர் எய்தாப் பழி.*
*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## உயரிய சமுதாயத்திற்கு...

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை ஏற்படுத்தித்தரும் காரணிகளில் பாடசாலைகள் முக்கிய பங்கை வகிக்கின்றன.

இளம் பருவத்தின் பெருமளவு நேரம் பாடசாலைகளில் செலவிடப்படுவதுடன், சமூகமயமாதலுக்கான முகவர்களாகப் பிரதான பாத்திரத்தையும் கல்விச்சாலைகளே வகிக்கின்றன.

இந்தவகையில் தனியே கற்றல் மட்டுமல்லாது ஒவ்வொரு மாணவனும், மாணவியும் சமூகத்திற்குப் பொறுப்பானவர்களாக உருவாவதற்கு வேண்டிய வழிகாட்டுதல் நெறிகளையும் தருவதாகவே பாடசாலைகள் திகழ்கின்றன.

இவ்வகையில் ஒரு முழுமையான மனிதனை தோற்றுவிப்பதற்கான பிரதான சூழ்நிலையைத் தரும் பாடசாலைகளில் - மாணவர்களைச் செம்மையானவர்களாகவும், ஒழுக்கசீலர்களாகவும் வளர்த்தெடுப்பதற்கு ஒழுக்கக் கல்வியை அறிமுகம் செய்ய கல்வியமைச்சு தீர்மானித்திருக்கின்றது. இந்த நடவடிக்கையானது - காலத்திற்குத் தேவையான ஒன்றென்பதோடு- இதனை அமுலாக்க வேண்டிய கட்டாயத்தையும் இன்றைய சமூக நிலைமை வலியுறுத்துவதாக அமைகின்றது.

பாடசாலை மாணவர்களிடையே காணப்படுகின்ற - வேண்டத்தகாத பண்புகளைக் களையவும், நற்பண்புகளையும் நல் ஒழுக்கங்களையும் கடைப்பிடிப்பதற்கான வழிவகைகளை மாணவர்களிடையே உள்வாங்கச் செய்யவும் ஒழுக்கக்கல்வி அவசியமாகின்றது.

இன்றைய பாடசாலை மாணவர்களிடையே பெற்றோரை, மூத்தோரை கனம்பண்ணும் பண்பு குறைவடைந்திருக்கின்றது.

அனுபவத்திலும், அறிவிலும், வயதிலும் மூத்தவர்களிடமிருந்து - அறிவுரைகளை, ஆலோசனைகளை பெறுவதை இன்றைய இளம் சமுதாயம் வேப்பங்காயாகவே எண்ணுகின்றது.

பணிவும், தன்னடக்கமும் தேடற்கரிய பண்புகளாகிவிட்டன.

இவை அனைத்தும் கடந்து மூத்தோரை உளரீதியாக மட்டுமல்ல உடல் ரீதியாகத் துன்புறுத்தி அதில் சந்தோஷம் காணுமளவிற்குக் கூட நிலைமை தீவிரமடைந்திருக்கின்றது.

அண்மையில் - ஒரு சில தினங்களுக்கு முன்னர் நாவலர் வீதிப்பகுதியில் வீதியோரமாக நடந்து சென்ற வயோதிபர் ஒருவரை, எதுவித காரணமுமின்றி வயரால் தாக்குமளவுக்கு- அதனை சுவாரசியமான சம்பவமாக எடுத்துக்கொண்டு, அந்த வயோதிபர் துன்பப்படுவதைக் கண்டு நகைக்குமளவுக்கு - இளஞ்சமுதாயத்தினரின் போக்கு உருவாகியிருப்பதை இங்கு ஒரு உதாரணமாக நாம் நோக்கலாம்.

அதேவேளை - சமூகத்தில் நடந்து கொள்ளும் வழிமுறைகள், பண்புகள் கூட இன்றைய மாணவர்களிடம் இல்லாமல் போவதையும் வெகு சாதாரணமாகவே கண்டு கொள்ள முடிகின்றது.

வீதிகளில், பொது இடங்களில் குழுக்களாகச் சேர்ந்து இளைஞர்கள் புரியும் வரைமுறையற்ற செயல்களும், கிண்டல் கேலிகளும் முறைதவறிய நடத்தைகளும் - முகத்தைச் சுழிக்க வைப்பதை, வேதனைப்படுத்துவதை யாழ்.குடாநாட்டில் எங்கெங்கும் அவதானிக்கக்கூடியதான சமூகச்சூழலை பலரும் கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

இன்றைய மாணவர்களிடம் பொறுப்புணர்வும், தலைமைத்துவப் பண்பும் பற்றிப் பேசினால் - அவற்றை ஏதோ விநோதப் பண்புகளாக பார்க்கும் மாணவர்களையே தாம் வகுப்பறைகளில் காண்பதாக ஆசிரியர் ஒருவர் கவலையுடன் குறிப்பிட்டார்.

அதேவேளை - தொலைக்காட்சி, திரைப்படங்களின் செல்வாக்கும் அவற்றினூடான பதிவும் மாணவர்களை இன்னமும் மாய உலகத்திற்குள்ளேயே வைத்திருப்பதில் வெற்றி காணுகின்றன.

அதீதமான பாலியல் சார்ந்த கிளர்வுகள், நெறிமுறையற்ற வன்முறைசார்ந்த செயற்பாடுகள், யதார்த்தத்திற்குப் பொருந்தாத கனவுச்சூழல்கள் என இவை கற்றுத்தரும் வேண்டத்தகாத பாடங்கள்- இன்று எமது வீடுகளிலுள்ள இளம் பிஞ்சுகளிலேயே வெளிப்படுத்தப்படுகின்றன.

இத்தகைய புறச்சூழல்கள் பற்றிய தெளிவும், வரைமுறைகளும், உண்மையும் மாணவர்களிடம் எடுத்துச்சொல்லப்பட வேண்டும்.

சமூகத்திற்கேற்ற உயர் பண்புகள் வகுப்பறைகளில் பயிற்சிகளினூடாக, செயற்பாடுகளினூடாக வலியுறுத்தப்பட வேண்டும்.

பாடசாலைகள் - அறிவுசார் கல்வியோடு மட்டும் நின்றுவிடாமல், பூரணத்துவமான மனிதர்களை உருவாக்கும் சமூகமயமாதல் பங்கினையும் அவை சிறப்பாக நிறைவேற்ற வேண்டும்.

இதற்கு ஒழுக்கக் கல்வி அறிமுகப்படுத்தப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

உலகின் தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்கள் பலவற்றிலும் ஒழுக்கக்கல்வியானது வகுப்பறைக் கற்பித்தலுடன் இணைக்கப்பட்டு, அது ஓர் பாடமாக ஆக்கப்பட்டிருக்கும் நிலையில்,

இந்த ஒழுக்கக் கல்விக்கான பரீட்சைகளும், மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டு, இக்கற்றலில் தேர்ச்சி பெறுவோரே அடுத்தகட்டத்திற்கு நகர முடியும் என்ற கட்டாயம் அங்கெல்லாம் அமுலாக்கப்படும்போது-

இங்குள்ள பாடசாலைகளும் ஒழுக்கக் கல்வியைப் போதிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை நாம் முழுமனதுடன் வரவேற்க வேண்டும்.

மக்களின் வாழ்வியலில் முக்கியத்துவம் பெறும், வாழ்க்கை கட்டியெழுப்புவதற்கு அடித்தளமாகும் ஒழுக்கத்தை - எமது இளஞ்சமுதாயத்திற்கு சற்றே அழுத்தமுடன் எடுத்துச் சொல்லி அவர்களை வழிநடாத்த அனைவருமே ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

# புலிகளிடம் இணைய வரும் சிறுவர்கள் உடனுக்குடன் பெற்றோரிடம் ஒப்படைப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவட்டச் செயலகத்தில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைவதற்கு வந்த மேலும் இரண்டு சிறுவர்கள் உடனடியாகவே பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைவதற்காக வந்த களுதாவளையைச் சேர்ந்த தில்லையம்பலம் நிரோஜன் (13 வயது), அக்கரைப்பற்றைச் சேர்ந்த தாமோதரம் சந்திரகுமார் (13 வயது) ஆகிய இரு சிறுவர்களுமே நேற்று முன்தினம் கண்காணிப்புக் குழு முன்னிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் கொக்கட்டிச்சோலை அரசியல் பொறுப்பாளர் விமல்ராஜினால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த வாரமும் இதேபோன்று ஐந்து சிறுவர்களை மட்டக்களப்பில் வைத்து விடுதலைப்புலிகள் பெற்றோரிடம் ஒப்படைத்தது தெரிந்ததே.

# நீண்டகாலத் திட்டங்களை நடைமுறைப்படுத்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தீர்மானம்!

(திருகோணமலை)

அமைதிச் சூழ்நிலை திரும்பும் நேரத்தில் - உடனடிச் செயற்பாடுகளை மற்றைய நிறுவனங்களிடம் கையளித்து

திருமலை மாவட்ட ஐ.சி.ஆர்.சி. குழுவினர்



விட்டு, நீண்டகாலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், தொடரவும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் தீர்மானித்துள்ளதாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் திருமலைக்கான வதிவிடப் பிரதிநிதியாகப் பொறுப்பேற்ற லீனா மில்னர் தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாடொன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது -

யுத்தகாலத்தில் - காணாமற்போனோரைத் தேடும் பணியைச் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தொடர்ந்து மேற்கொள்ளும் அதேவேளை, சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் பற்றிய கருத்துக்களைப் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் அது வழங்கும்.

நிலைமை முன்னேற்றமடைந்து வருவதைத் தொடர்ந்து திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நாம் மேற்கொண்டுவந்த நடமாடும் மருத்துவச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுவிட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பறக்கும் வேவு விமானங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் - விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தரவைப் பகுதியில் விமானப்படையின் ஆளில்லா வேவு விமானம் கடந்த 3 நாட்களாக வேவுப் பணியில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமாதானம் நிலவும் இக்காலகட்டத்தில் இவ்வாறு வேவு விமானங்கள் தொடர்ந்தும் மூன்று நாட்களாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் செயற்படுவதனால் பொதுமக்களின் மத்தியில் அமைதியற்ற நிலை தோன்றியுள்ளது.

# 85 பொதுமக்கள் படுகொலை; நினைவுத்தூபி திறக்கப்படுகிறது!

மட்டக்களப்பு மண்முனைத்துறைக்குத் தெற்கே மகிழடித்தவு என்னும் இடத்தில் இறால் பண்ணையில் இடம்பெற்ற படுகொலையின் 16வது ஆண்டு நிறைவு நிகழ்வை அனுஷ்டிப்பதற்குப் பொது அமைப்புக்கள் ஏற்பாடு செய்து வருகின்றன.

1987 ஆம் ஆண்டு தைமாதம் 28ஆம் திகதி கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு, முனைக்காடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 85 பொதுமக்களைப் படுகொலை செய்ததனை நினைவுகூரும் வகையில் மகிழடித்தீவு சந்தியில் தூபியொன்றும் வரும் செவ்வாயன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் மகிழடித்தீவு இந்து இளைஞர் மன்றம், பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் அனுசரணையுடன் சமய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓய்வூதியத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக அனைவரும் களம் இறங்க வேண்டும்!

## அழைப்பு விடுக்கிறார் தினேஷ் குணவர்த்தனா

அமைய, தற்காலிக அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்ட அரசாங்க ஊழியர்களினதும், இனிமேல் புதிதாக அரசாங்க சேவையில் இணைபவர்களுக்கும் ஓய்வூதியச் சலுகையை அரசாங்கம் நிறுத்தவுள்ளது என்று மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

அமைய, தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஊழியர்களது ஓய்வூதியத்தை நிறுத்துவது அவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகையை மீறுவதாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த ஓய்வூதியச் சட்டத் திருத்தத்திற்கு எதிராக தொழிற்சங்கங்களும், அமைப்புகளும் நடவடிக்கையில் இறங்கவேண்டும் என்று தினேஷ் குணவர்த்தனா கூறியுள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் அனுமதி கிடைத்தவுடன் 27 ஆம் திகதி நாடாளுமன்றத்திற்கு இத்திருத்தச்சட்ட மூலம் கொண்டு வரப்படலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதிய போர்க்கப்பல்களை வாங்காமல் பழுதடைந்த கப்பல்களைத் திருத்துவது நல்லது

## கடற்படை அதிகாரிகள் அரசுக்கு ஆலோசனை

கடற்படைக்குப் புதிதாகப் போர்க்கப்பல்களை கொள்முதல் செய்வதற்குப் பதிலாக, தற்போதுள்ள போர்க்கப்பல்களை திருத்திச் சேவையில் ஈடுபடவைப்பதன் மூலம் செலவினங்களைக் குறைத்துக் கொள்ளலாம் என்று சிரேஷ்ட கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் பெருந்தொகையான நிதியைச் செலவிட்டு கொள்முதல் செய்யப்பட்ட "சயுர", "பராக்கிரமபாகு" ஆகிய கப்பல்களுடன் இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட இரு 'டோறா' அதிவேகப் படகுகள் தாக்குதற் படகுகளும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

இவற்றைத் திருத்தாது புதிய படகுகளைக் கொள்முதல் செய்வதால், அதிக பணம் விரயமாகும் எனக் கடற்படைக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனவும் அந்தப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

போர்க்கப்பல்களை நிறுத்துவதற்குத் திருகோணமலை, காங்கேசன்துறை துறைமுகங்களில் போதிய இடவசதி இல்லாததால், இதற்கென இடவசதியை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தேவைப்படும் நிதியை புதிய கப்பல்களை கொள்முதல் செய்வதற்கு ஒதுக்கும் நிதியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கடற்படை அதிகாரிகள் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறியுள்ளனர்.

# சிங்கள மக்களிடம் விற்கக் கூடிய சரக்கு எது?

# அரசியல் வியாபாரத்தில் நாட்டம் காட்டும் கட்சிகள்!

தெற்குத் திசையினிலே
கொழும்பிலிருந்து இந்திரஜித்

நாட்டில் சில வார காலப்பகுதிக்குள் அரசியலில் மாற்றங்கள் ஏற்படும் எனக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதனை அமைசசர் ரவூப் ஹக்கீமும் புத்தளம் நகரில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் வைத்துச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் மாற்றங்கள் எனச் சொல்லப்படுகின்றபோது பல்வேறு ஊகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சி மாறுமா? அல்லது பொதுஜன முன்னணி - ஜனதா விமுக்தி பெரமுன கூட்டணியின் ஆட்சி நிலைநாட்டப்படுமா? இவையில்லாமல் பொதுத் தேர்தல் ஒன்று இடம்பெறுமா? என்ற கேள்விகள் எழுந்துள்ள நிலையில்- சம்பந்தப்பட்ட கட்சிகள் அனைத்தும் தமது ஆதரவு அலைகளை முன்னகர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

பொதுஜன முன்னணியும், ஜனதா விமுக்தி பெரமுனவும் தேர்தல் கூட்டு ஒன்று தொடர்பில் தீவிரமான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளன. எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் இணக்கம் ஒன்றை எட்டிவிடலாம் என்ற அடிப்படையில் இரண்டு கட்சிகளும் முனைப்பைக் காட்டி வருகின்றன.

உண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன ஆகிய கட்சிகளுக்கு இடையிலேயே கூட்டுத் தொடர்பாகப் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. இருந்தாலும் இந்தப் பேச்சுக்கள் தொடர்பாகப் பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள்- லங்கா சமசமாசக் கட்சி காட்டிவந்த அதிருப்திப் போக்குத் தணிந்துள்ள நிலையிலும், பொதுஜன ஐக்கிய முன்னணியில் முடிவுகளைத் தீர்மானிக்கும் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பதனாலும்- சம்பந்தப்பட்ட தேர்தல் கூட்டை பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுனக் கூட்டு எனப் பெயரிடும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் தேர்தல் கூட்டின் தற்போதைய நிலைமை என்ன? ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை வீழ்த்துவது என்பதில் சம்பந்தப்பட்ட கட்சிகள் பெரும்பாலும் இணக்கத்தைக் கண்டுவிட்டன. எனினும், வடக்கு- கிழக்குப் பிரச்சினை தொடர்பான விடயத்தில் இந்தக் கட்சிகளால் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்க முடியாதுள்ளது. ஏனெனில், பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்கனவே இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முன்வைத்த அம்சங்களை ஜனதா விமுக்தி பெரமுன ஆட்சேபித்திருந்தது. அதிகாரங்கள் ஒரு பிரிவினருக்கு மாத்திரம் பகிரப்படக்கூடாது என்பதில் ஜனதா விமுக்தி பெரமுன விடாப்பிடியாக இருந்து வருகிறது. அதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாடுகளை அது எதிர்த்து வருகிறது.

எனினும், இதுவரை இனப்பிரச்சினைக்கு எந்தவொரு சாதகமான தீர்வையும் ஜனதா விமுக்தி பெரமுன முன்வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனதா விமுக்தி பெரமுன இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை முன்வைக்காமலேயே ஆட்சேபனைகளை மாத்திரம் தெரிவித்து வருவதே அதனுடைய அரசியல் பலத்துக்குக் காரணமாகும். ஏனெனில்- நாடாளுமன்றத்தில் ஒரு உறுப்பினரை மாத்திரம் கொண்டிருந்த அந்தப் பெரமுன இன்று அரசாங்கம் ஒன்றுக்கான மாற்றம் தொடர்பாக பேசும் அளவிற்கு உயர்ந்துள்ளது.

தென்னிலங்கை சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் அவர்களை இலகுவில் ஏமாற்றமுடியும் என்ற நிலைப்பாட்டைத் தென்னிலங்கைக் கட்சிகள் கொண்டுள்ளன. எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சம்பவங்கள் இடம்பெற்றாலும்- தேர்தல் காலத்தில் அவற்றை இந்தக் கட்சிகள் இலகுவில் முறியடித்து மக்களின் வாக்குகளை வசீகரித்துக் கொள்கின்றன.

அந்தவகையில்- ஜனதா விமுக்தி பெரமுன சற்று மாறுபட்ட போக்கைக் கடைபிடித்து வருகிறது. ஏனைய கட்சிகள் போலல்லாமல் சில நன்னடத்தை விடயங்களைச் சிங்கள மக்கள் மத்தியில் வியாபித்து வருகிறது.



சமாதானத்திற்கான எதிர்ப்பும் எதிர்பார்ப்பும் தெற்கில் விரவிக் கிடக்கின்றன.

ஏற்கனவே தாம் மேற்கொண்ட வன்முறைகளை மக்கள் மறந்துபோகும் அளவிற்குத் தமது அரசியல் நகர்வை மேற்கொண்டு வருகிறது.

இதனடிப்படையிலேயே இனப்பிரச்சினைத் தீர்வுத் தொடர்பில் அந்தக் கட்சி எந்தவொரு உருப்படியான அம்சங்களையும் முன்வைக்காது- சிங்கள இனத்திற்குச் சாதகமான பாணியில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நடவடிக்கை இதுவரை அந்தக் கட்சியைப் பொறுத்தவரை உதவி வந்திருக்கிறது. இந்த நிலையில் தேசிய கூட்டு ஒன்று சம்பந்தமாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் நடத்தும் பேச்சுவார்ததையில்தான் அதன் உண்மைத்தன்மை வெளியாகப் போகின்றது. இந்த இரண்டு கட்சிகளுக்கும் இடையில் இடம்பெற்றுள்ள பேச்சுக்களின்போது, ஜனதா விமுக்தி பெரமுன இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாகத் தனது நிலைப்பாட்டை- அதாவது, தீர்வு யோசனைகளை ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் வழங்கியிருக்கின்றது.


இதற்குப் பொதுஜன ஐக்கிய முனணி என்ன பதிலை வழங்கப்போகிறது என்பது எதிர்வரும் 6 ஆம் திகதி தெரியவரும். இனப்பிரச்சினைத்தீர்வு முன்னெடுப்பில் இதுவரை எடுத்து வைத்த நகர்வுகளைப் பொதுஜன ஐக்கிய முன்னணி வலியுறுத்தப்போகிறதா? அல்லது ஜனதா விமுக்தி பெரமுனவின் ஆலோசனையை அப்படியே ஏற்றுக்கொள்ளப் போகிறதா? அல்லது வடக்கு - கிழக்குப் பிரச்சினைத் தீர்வைப் பற்றிப் பின்னர் பேசலாம், இப்போதைக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை வீழ்த்தினால் போதும் என்ற நிலைப்பாட்டை அந்த முன்னணி எடுக்கப் போகிறதா? என்பதே இன்று எழுந்துள்ள கேள்விகளாகும். இவ்வாறான சூழ்நிலையில் தமது ஆட்சிக்குச் சுருக்குக்கயிறு வருவதை உணர்ந்துள்ள ஐக்கிய தேசிய முன்னணி, மாற்று முனைப்புகளில் ஈடுபட்டுள்ளமையை கடந்தவாரக் கட்டுரையில் நோக்கினோம். தற்சமயம் அதன் பிரதிபலன் எவ்வாறு இருக்கிறது என்பதைப் பார்ப்போம்.

பிரதான அமைச்சர்கள் தலைமையில்- ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மக்களுக்குத் தெளிவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.

முதற்கட்டமாக- ஐக்கிய தேசிய முன்னணியின் மக்கள் பிரதிநிதிகளுக்கு இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அவர்கள் மக்கள் மத்தியில் அடிமட்டத்தில் இருந்து பிரசாரங்களை மேற்கொண்டு, எந்த நேரத்திலும் வரக்கூடிய தேர்தலொன்றில் வெற்றிபெறுவதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டமாகும்.

நாட்டில் பொருட்களின் விலையுயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கை படிப்படியாகக் குறைந்து வருகின்றமை, தனியார் மயப்படுத்தலினால் எழுந்துள்ள அதிருப்தி, இனப்பிரச்சினைத்தீர்வு, பேச்சுவார்த்தை ஒன்றை மாத்திரமே வைத்துக்கொண்டு தமது அரசாங்கத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதநிலை போன்றவைகளுக்கு பிரதம மந்திரி முகங்கொடுக்க வேண்டியவராகி இருக்கிறார்.

இத்தனையையும் அவர் சமாளிக்க வேண்டுமானால், உலக நாடுகள் இலங்கைக்குத் தருவதாகக் கூறிக்கொண்டிருக்கும் நிதியுதவிகள் உடனடியாகக் கிடைக்கவேண்டும். அதன் மூலம் அபிவிருத்தி முனனெடுக்கப்படும் அதேநேரம், முன்னுதாரணத்திற்காகப் பாரிய உயர்வுகளைப் பெற்றுள்ள பொருட்களின் விலைகள் உடனடியாகக் குறைக்கபபடவேண்டும். தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு இப்போதைக்குப் பாரிய அச்சுறுத்தல்கள் இல்லை. ஏனெனில், அவர் சமாதானத்தை ஏற்படுத்துவார் என்ற நம்பிக்கை இன்னமும் பெரும்பாலான தமிழ் மக்கள் மத்தியில் நிலைபெற்றே உள்ளது.



அமைச்சர் ராஜித சேனாரட்ன அண்மையில் அரசாங்கத்திற்கு சற்று ஆறுதல் அளிக்கக்கூடிய- அதேநேரம், மக்களுக்கும் சற்றுத் திருப்தியைத் தரக்கூடிய தகவல் ஒன்றை வெளியிட்டார்.

போர் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், அரசாங்கம் தற்சமயம் கடந்த கால ஆயுதக் கொள்வனவுகளுக்கான கடன்களை மீளச்செலுத்திக் கொண்டிருக்கின்றது. இன்னும் குறிப்பிட்டதொகைக் கடனை மாத்திரமே அரசாங்கம் செலுத்தவேண்டிய நிலையில் உள்ளது.

இதனை இந்தவருட நடுப்பகுதியில் செலுத்திய பின்னர் நிச்சயமாகப் பொருட்களின் விலையுயர்வுகள் தடுக்கப்படும், அல்லது விலைகள் குறைக்கப்படும் என்ற தகவலை அமைச்சர் ராஜித தெரிவித்திருந்தார். ஆனால், இதனை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எவ்வாறு மக்களுக்குக் குறுகியகாலத்தில் நிரூபிக்கப்போகிறது என்பதுதான் தொக்கி நிற்கும் கேள்வியாகும்.

இவ்வாறான சிக்கலான சூழ்நிலைகளுக்குள்ளும் கடந்த வாரத்தில் இடம்பெற்ற சில சம்பவங்கள் அரசாங்கத்துக்கும் -பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்தின.

ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின்போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் படைக்குச் சிறுவர்களைச் சேர்ப்பதாக ஜனாதிபதி கூறியவேளையில்- பிரதமருக்கும் அவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. எனினும், பிரதமர் இந்த வாதத்தை மிகவும் பக்குவமாகச் சமாளித்துவிட்டார்.

இந்தச் சமாளிப்பின் அடிப்படையிலேயே தமது கட்சியைப் பலப்படுத்தக்கூடிய அமைச்சர்கள் பதவிபபிரமாணம் தொடர்பில் ஜனாதிபதியின் இணக்கத்தை அவரால் பெற முடிந்தது என்பது குறிப்பிடக்கூடிய அரசியல் நகர்வு ஆகும்.

இலங்கைக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி யசுஷி அகாஷி, ஜனதா விமுக்தி பெரமுனவிடம் தெரிவித்த கருத்துத் தற்சமயம் தென்னிலங்கையில் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளையும், இலங்கை அரசாங்கத்தையும் சமனான தரத்தில் வைத்தே தமது நாடு நோக்குவதாக அவர் தெரிவித்திருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தடையை நீக்கியதன் மூலம் அவர்கள் சர்வதேசத்தில் புகழடைந்திருப்பதை இந்தக் கருத்துப் புலப்படுத்துவதாக ஜனதா விமுக்தி பெரமுன கூறியுள்ளது.

இலங்கை தொடர்பான ஜப்பானின் பிந்தியநிலை நகர்வுகள் இந்தியா உட்பட தென்னிலங்கையிலும் பேசப்படுகின்ற அதேநேரம், ஜப்பானில் மே மாதத்தில் நடைபெறவிருக்கின்ற உதவி வழங்கும் மாநாட்டில் இலங்கைக்கான பாரிய நிதியுதவிகளை அரசாங்கம் எதிர்பார்த்து நிற்கிறது. அதன் மூலமே பொதுஜன முன்னணி- ஜனதா விமுக்தி பெரமுன கூட்டினை எதிர்த்துச் செயற்பட முடியும் என அரசாங்கம் நினைக்கிறது.

இது இவ்வாறு இருக்கையில், இலங்கைக்கு ஏற்புடைய சமஷ்டி ஆட்சித்தீர்வு தொடர்பாக ஆராய்வதற்கென ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற நாடாளுமன்றக் குழுவினர் நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக மக்களின் உரிமைகள் மற்றும் தீர்வுகள் தொடர்பாக வெளிநாடுகளில் ஒருமித்த கருத்துக்களை வெளியிட்டு இருந்தனர். என்றாலும் இலங்கைக்குத் திரும்பி வந்ததன் பின்னர் இவர்களின் கருத்துக்கள் தமது கட்சிக் கொள்கைகளுக்கேற்ப மாற்றம் பெற்றுவிடுமா? அல்லது அனைவரும் ஒருமித்த கருத்துக்களை முன்வைக்கப் போகிறார்களா? என்பது கேள்விக்குறியானதே. ✪



நன்றி: டெய்லி மிரர்.

# வயது ஒரு தடையல்ல! பணிக்கு ஆயத்தமா?

ஞாயிறு சிந்தனை

"சில காரியங்களைச் செய்ய முடியாத இளமைக்கும், சில காரியங்களைச் செய்யமுடியாத முதுமைக்கும் இடைப்பட்ட காலமே நடுத்தர வயது" என்பர். இது முற்றிலும் உண்மை.

நம்முடைய வாழ்க்கையின் முதற்பகுதியில், "தனியே செல்லலாகாது நீ இன்னும் சிறுவனாய் இருக்கிறாய், காரோட்ட, தேரோட்ட வயது போதாது. திருமணம் செய்யும் வயது உனக்கு இன்னும் வரவில்லை" என்று கூறப்படுவதும் - பிற்பகுதியிலோ "நீ பள்ளிக்குச் செல்லும் வயதைக் கடந்து விட்டாய். புதிதாய் வேலையில் சேர வயதாகிவிட்டது. நீ இனிமேல் தனியாக வாழமுடியாது" என்றும் கூறுவார்கள். இப்படியே முன்னும் பின்னும் பல காரியங்களைச் சொல்லுவார்கள். மெய்யாகவே நமது சமுதாயத்தில் வயது ஒரு சிக்கலான காரணியாகும்.

பரிசுத்த வேதாகமத்தில் தாவீது அரசனின் வாழ்க்கையைப் புரட்டிப் பார்க்கும்போது, தனது முப்பதாவது வயதில் தாவீது அரசரானகப் புறப்பட்டபோது "தாவீதே நீ ஓர் இளைஞன், அரசனாயிருக்க உனக்கு வயது போதாது, உன்னைவிட மூத்தவர் எங்களுக்குத் தேவை" எனச் சிலர் அப்போது கூறியிருக்கலாம்.

தாவீது அரசர் நாற்பது ஆண்டுகள் ஆட்சிசெய்து எழுபது வயதை நெருங்கி இருக்கும்போது, வேறு சிலர் "தாவீது அரசரே உமக்கு வயதாகிவிட்டது. இஸ்ரேலின் அரசனாயிருக்க உம்மால் முடியாது. உம்மைவிட இளையவர் ஒருவரிடம் இதை ஒப்படைத்துவிடும்" எனக் கூறியிருக்கலாம். ஆனால், எல்லாவிதத்திலும் தாவீதை இறைவன் பாலித்தார். இறைவனின் பார்வையில் வயது ஒருதடையல்ல.

மிகவும் இளையவர்களை இறைவ்ன் பயன்படுத்தியதாக வேதவசனம் கூறுகின்றது. எரேமியா தீர்க்கதரிசி, "ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ நான் பேச அறியேன். சிறுபிள்ளையாயிருக்கிறேன் (எரே1:6) என்றார். ஆனால், இறைவன் அவரை உபயோகித்தார்.

தீமோத்தேயுவும் மிகச்சிறிய வயதிலேயே ஊழியம் செய்திருக்க வேண்டுமென வேதாகம ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஏனெனில் "உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு" (1திமோ.4:12) எனப் பவுல் தனது நிருபத்தில் எச்சரிக்கிறார்.

அப்போஸ்தலனாகிய யோவான் தனது முதிர்வயது வரையிலும் ஊழியம் செய்து, "திருத்தூதர் பணி" என்ற நூலையும் தனது இறுதிக் காலத்தில் எழுதினார் எனவும் கூறப்படுகிறது.

ஆம். அன்பான சகோதரனே, சகோதரியே, பெரியவர்களே இறைவனுடைய பார்வையில் வயது ஒரு தடையேயல்ல. சிறியவனோ, பெரியவனோ, வாலிபனோ, வயோதிபரோ யாவரையும் தமது நாமத்தினிமித்தம் எடுத்துப் பாலிக்க இறைவன் வல்லவர்.

*சி. என். ஹெய்ன்ஸ்*

எனவே உங்களுக்குள்ள அழைப்பு இன்னதென்று நீங்கள் உறுதிப்படுத்திக்கொண்டு தயக்கமின்றி முன்னேறிச் செல்லுங்கள். ஆண்டவராகிய இறையேசு உங்களோடே இருப்பார். ❖

# தமிழ் மக்களின் ஆதரவைப் பெற திட்டங்களை முன்வைக்கிறார் மகிந்த

## ஜனாதிபதி சந்திரிகாவிடம் சமர்ப்பிக்கவுள்ளாராம்

வட-கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்களின் ஆதரவைப் பொது ஜன ஐக்கிய முன்னணி பெற்றுக் கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்து ஜனாதிபதி சந்திரிகாவிடம் சிபார்சு செய்யப்போவதாக எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட விஜயம் குறித்து அறிக்கையொன்றைத் தயாரித்து ஜனாதிபதிக்கு வழங்கப் போவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

1982 ஆம் ஆண்டில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பின் போது, சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்ட கொப்பேகடுவவுக்கு யாழ்.மாவட்டத்தில் மட்டும் பத்து லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்தன.

எனவே, இப்பகுதி மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள திட்டங்களை வகுப்பது அவசியம். யாழ்.விஜயத்தின் மூலம் அமைச்சர் மகேஸ்வரன் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளப் பார்த்தார். அதனால் சில இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்து விட்டேன் என்றும் எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

# பொலிஸ் அதிகாரியின் வேட்டு ஊர்காவலரைப் பதம் பார்த்தது

(திருகோணமலை)

திருமலை - மொரவெவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவரின் ரி. 56 ரகத் துப்பாக்கி வெடித்ததில் ஊர்காவற்படைச் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்றது. இந்தச் சம்பவம் குறித்து மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதா, அல்லது தற்செயலாக இடம்பெற்றதா எனப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஊர்காவற்படைச் சிப்பாயின் உடல்நிலை மோசமாக இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## பல்கலைக்கழகத்தில் போட்டிப் பரீட்சை.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழீழ வரலாற்றுக் கண்காட்சி தொடர்பான போட்டிப் பரீட்சை இன்று காலை 11 மணிக்கு பல்கலைக்கழக இராமநாதன் பரீட்சை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைகள் தொடர்பாக பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்கள் காலை 10 மணிக்கு முன்னர் பரீட்சை மண்டப வாயிலில் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

# சமூக நலத்துறை அமைச்சு கிராம அலுவலருக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சமூக நலத்துறை அமைச்சினால் யாழ்.மாவட்டத்தில் பணி புரியும் கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கும் - கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குமான செயலமர்வு நடத்தப்பட்டு வருகின்றது.

நேற்றுக்காலை 9 மணிக்கு யாழ்.அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான இக் கருத்தரங்கில், சமூகநலத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் சொய்ஸா மற்றும் அமைச்சின் உயரதிகாரிகளும் விரிவுரையாளர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில், வலுவிழந்தவர்களின் குடும்ப உறவினர்களுக்கு, வலுவிழந்தவரை எப்படிப் பராமரிப்பதெனறும் மற்றும் வலுவிழந்தவர்களுக்கு நன்மையளிக்கும் வகையில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள் குறித்தும் விளக்கப்பட்டது.

(லி)

# யாழ்.நகரப் பகுதிகளில் அலையும் கட்டாக்காலிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர எல்லைக்குள் கட்டாக்காலி நாய்கள், ஆடு, மாடுகளின் நடமாட்டம் மீண்டும் அதிகரித்துள்ளது.

சிறிது காலமாக மாநகர சபையால் கட்டாக்காலி ஆடு, மாடுகளை பிடிக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது.

இதையடுத்து பலர் கால்நடைகளை மீண்டும் வீதிகளில் நடமாட விட்டுள்ளனர்.

நாய்களின் உரிமையாளர்கள் நாய்களை வளர்ப்பதாயின் முறைப்படி அனுமதி பெற்று வீடுகளுக்குள் வளர்க்கும்படியும்-

ஆடு, மாடுகளை வீதியில் நடமாட விடாமல் தமது வளவிற்குள் கட்டி வளர்க்கும்படியும் யாழ்.மாநகர சபை பொது மக்களுக்கு வேண்டுகோளையும் அறிவுறுத்தலையும் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சமஷ்டி குறித்த கருத்துக்களை அறிய எம்.பிக்களை சந்திக்கிறார் சந்திரிகா

(கொழும்பு)

அதிகாரப் பரவலாக்கல் சமஷ்டி ஆட்சிமுறை குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்தை அறிந்து கொள்வதற்காக, ஜனாதிபதி சந்திரிகா குரமாரதுங்க நாளை கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருக்கின்றார்.

நாளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் சமஷ்டி ஆட்சி முறை குறித்து முன்னாள் பிரதிக் கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால விளக்கமளிப்பார்.

இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமஷ்டி ஆட்சிமுறை தொடர்பாக கொண்டிருக்கும் கருத்துக்கள் குறித்துக் கேட்டறியவுளளார். நாளை மறுநாள் ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கு முன்னோடியாகவே இந்தக் கூட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா கூட்டவுள்ளார்.

அத்துடன் இந்தக் கூட்டத்தில் ஜே.வி.பியுடனான பேச்சுக்கள் மற்றும் எதிர்காலத்தில் அதனுடனான உறவு நிலை தொடர்பாகவும் ஆராயப்படும் எனவும் தெரியவருகின்றது.

# காட்டு விலங்குகளை வேட்டையாடுவது வனவளப்பாதுகாப்பு பிரிவினரால் தடை

வன்னியில்- பன்றி, முயல் தவிர்ந்த ஏனைய காட்டு விலங்குகளை வேட்டையாடுதல் மற்றும் அழித்தல் தடை செய்யப்பட்டிருப்பதாக தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

வனவிலங்குகளின் அழிவு வீதம் அதிகரித்து வருவதால் விலங்குகள் இனம் அழிந்துவிடக் கூடிய அபாயம் எழுந்துள்ளது. இதனால் பௌதீகச் சமநிலை பாதிப்புறும்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதனால் எமது வனவளத்தைக் கட்டியெழுப்புவதற்காக- பன்றி, முயல் தவிர்ந்த ஏனைய காட்டு விலங்குகளை வேட்டையாடுதல்,அழித்தல் முற்றாகத் தடை செய்யப்படுகின்றது. இந்த உத்தரவை அனைவரும் ஏற்று இத்தேசிய பணிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## புலிகளை...

நிராகரித்துவிட்டார் என்று தெரிவித்த சிஹல உறுமய பிரசார செயலாளர்- இந்த நிலையில் பிரதமர் எதற்காக இந்த முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறார் என்பது தெரியவில்லை என்றும் கூறியுள்ளார்.

அண்மையில் ஐரோப்பிய யூனியன் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடாத்தியபோது பிரதமரின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் புலிகளை சட்டபூர்வமான இராணுவமாக அனுமதிப்பது மற்றும் இலங்கையின் தேசியக்கொடியிலும் தேசியகீதத்திலும் மாற்றம் செய்து குறித்து பிரஸ்தாபித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இராணுவம் கொண்டிருக்கும் நிலைப்பாடு சரியானதென்றும் சிஹல உறுமய பிரசார செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

## 900 மில்லியன் ..

இதேவேளை- இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதியை விசாரிப்பதற்கான அனுமதியைத் தருமாறு சட்டமா அதிபரிடம் சி.ஐ.டி. பொலிஸார் கேட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப்பிரச்சினை நடைபெற்ற போது ஜனாதிபதி சந்திரிகாவே நிதியமைச்சர் பொறுப்பு வகித்ததால் அவருக்குத் தெரியாமல், அவரது அனுமதியில்லாமல் இம்மோசடி நடைபெற்றிருக்காது என்றே தற்போது கருதப்படுகிறது.

## பிரபாகரன்...

பிரபாகரனின் மிகப் பெரிய வெற்றி எதுவெனில், தனது மக்கள் அனைவரையும் தன்னோடு வழி நடத்திச் செல்வதாகும்.

நோர்வே நாட்டவர்கள் மத்தியஸ்தர்கள் அல்லர். `அவர்கள் அனுசரணையாளர்கள் மட்டுமே. இவர்கள் பேச்சுக்களில் பங்கு கொள்வதில்லை. இந்தியர்களைப் போல பேச்சுக்களில் கலந்து கொண்டு, அவர்கள் நிர்ப்பந்தங்களைச் செலுத்தவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் தீர்வு எம்மீது வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்டதாலேயே பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது போனது. அந்த ஒப்பந்தமும் தோல்லியடைந்தது.

புலிகளுக்கு வானொலி உபகரணங்கள் வழங்கிய விடயம் ஒரு பொருட்டானதேயில்லை. புலிகள் இணையத்தளங்கள் மூலம் பிரச்சாரங்களை செய்கின்றபோது வானொலிக் கருவிகள் எந்த முக்கியத்துவமும் அற்றவை.

புலிகள் நீதிமன்றங்கள், பொலிஸ் நிலையங்களை அமைப்பது ஒரு புதிய விடயமல்ல. அவை ஏற்கனவே நடைமுறையில் இருப்பவை தான். இன்று அவை பிரபல்யம் பெற்றுள்ளன அவ்வளவே.

மக்களை இலகுவாக நிர்வகிப்பதற்கே புலிகள் நிர்வாகக் கட்டமைப்புக்களைத் தோற்றுவித்தார்கள். இது தனி நாட்டுக்கான கட்டமைப்பு என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

பிராந்திய சுயாட்சி ஒன்றையே புலிகள் கோரி வருகின்றனர். அவர்கள் சமஷ்டி அதிகாரமுள்ள பிரிந்து செல்லும் கூட்டாட்சியைக் கோரவில்லை. அரசாங்கமும் புலிகளும் விரும்புவது ஒரு நிலையான திருமணத்தையேயன்றி விவாகரத்தையல்ல என ரிரோன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

## பகிடிவதையில்..

எடுக்கப்படும்.

பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு நேற்று கிடைத்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து குறித்த மாணவர்கள் மீது உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன, என்பதும் குறிப்பிடத்தக்கது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புதிய துணை...

மாணவர்கள் தடுத்து நிறுத்தியிருந்தனர். நேற்றுக் காலை பல்கலைக்கழக வாசலை மறித்துக் கொண்டு பெருமளவிலான மாணவர்கள் மறியற் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர் ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

இதேவேளை -மூதவை உறுப்பினர் ஒருவர் பங்கு கொள்ளவிடாமல் தடுக்கப்பட்ட நிலையில், மூதவையில் முக்கிய தீர்மானங்களை எடுப்பது சட்டரீதியான சிக்கல்களை ஏற்படுத்தும் என்பதனாலேயே புதிய துணைவேந்தர் தெரிவுக்கான மூதவைக் கூட்டம் பிற்போடப்பட்டதாக துணைவேந்தர் மற்றும் மூதவை உறுப்பினர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மூதவைக் கூட்டம் எதிர் வரும 29 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

## களுத்துறை தமிழ் அரசியல் கைதிகள்

# விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா.பொதுச் செயலாளருக்கு கடிதம்

(கொழும்பு நிருபர்)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள், தம்மை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனானுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

நேற்று முன்தினம் இந்தக் கடிதம் ஐ.நா. பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தமது விடுதலைகுறித்து அரசாங்கம் வழங்கிய அனைத்து உறுதிமொழிகளுமே மீறப்பட்டு விட்டன. இதனால் ஐ.நா. செயலளார் இந்த விடயத்தில் தலையிட்டு தமது விடுதலைக்கு வழிவகை செய்ய வேண்டும் என அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளதுடன், அக்கடிதத்தில்- கோபி அனான் இலங்கைக்கு வரும் போது களுத்துறைச் சிறையிலுள்ள கைதிகளின் விடுதலை குறித்து அரசுடன் பேச்சு நடத்த வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறைச் சிறைசாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுவிக்கக்கோரி எதிர் வரும் 3ஆம் திகதி முதல் சாகும் வரையிலான தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாக முன்னறிவித்தல் தெரிவித்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப் புலிகள்...

ஆனால், அது நியாயமற்றது . சர்வதேச நாடுகளில் அவ்வாறானதொரு வழமை இல்லை. நிரந்தர தீர்வு எட்டப்படும் வரை விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களை அரசாங்கம் ஒரு போதும் களையாது.

விடுதலைப்புலிகள் வைத்திருக்கின்ற நீதிமன்றங்கள் ,பொலிஸ் நிலையங்கள் போன்றவற்றை சமஷ்டித் தீர்வொன்று ஏற்படும்போது அதற்குள் உள்ளடக்குவது குறித்து பேசப்படும். அந்த விடயங்கள் குறித்து தற்போது எவரும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

சமஷ்டி முறையில் தீர்வொன்று அமையுமானால் ஒரு ராணுவப்படையே இருக்கும். சமஷ்டி அரசிற்குள்ளும் ராணுவம், பொலிஸ் போன்ற கட்டமைப்புக்கள் இருக்கக்கூடிய வடிவங்கள் உள்ளன. அவ்வாறானதொரு சந்தர்ப்பம் ஏற்படுகின்ற பட்சத்தில் விடுதலைப்புலிகளின் பொலிஸ் பிரிவிற்கு பிரிட்டிஷ் ராணுவம் பயிற்சி வழங்குவதற்கும் தயாராக இருக்கின்றது.

இலங்கை இராணுவத்தை மீளமைப்பு செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது. இது தொடர்பாக பல் வேறு மட்டங்களிலும் ஆரயப் பட்டு வருகின்றது. விரைவில் புதிய மறுசீரமைப்புக்கான முடிவு எட்டப்பட்டு விடும்.

இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு ஒன்று ஏற்படும் பட்சத்தில் அதனை மக்களிடம் சமர்ப்பிக்கவுள்ளோம். தீர்வு ஒன்றை ஏற்படுத்துவது எமது கடமை . அது சரியா பிழையா என்பதை தீர்மானிப்பது மக்களே.

இனப்பிரச்சினைத் தீர்விற்கான நோர்வேயின் மத்தியஸ்த்த முயற்சியை ஆரம்பித்ததும் அதற்கான ஏற்பாடுகளை செய்ததும் ஜனாதிபதி சந்திரிக்காவும், முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருமே. அந்த முயற்சியைத்தான் எமது அரசாங்கம் தொடருகிறது என்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

கடந்தகாலப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதையும், முறிவடைந்ததையும் விபரித்த பிரதமர், இம்முறைதான் பேச்சுவார்த்தை ஒருவருடம் வரை நீடித்திருக்கின்றது என்றும் அதற்கு தமது அரசாங்கமே காரணம் என்றும் கூறினார்.

வடுதலைப்புலிகளின் வானொலிக்கு கருவிகள் அனுப்பியது சட்டரீதியானது என்று கூறிய பிரதமர், தமது வானொலிச்சேவையை விஸ்திரிப்பதற்கு நவீன கருவிகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து தாருங்கள் என விடுதலைப்புலிகள் கேட்டனர்.

அவ்வாறு புலிகள் தம்மை கேட்டதன் மூலம் இலங்கைச் சட்ட திட்டங்களை அவர்கள் மதிக்கின்றார்கள் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்றும் பிரதமர் கூறினார். எத்தகைய எதிர்ப்புக்கள் வந்தாலும் பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதிலிருந்து தாம் பின் வாங்கப்போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விக்னா கல்வி நிறுவனம்

O/L DAY CLASS -(8.30-2.00) பிரிவு 1 ஆரம்பம் 27.01.03.(8.30)
SAT, SUNDAY CLASS (8.30-2.30) ஆரம்பம் 01.02.03.(8.30)
EVENING CLASS (3.15-5.30) ஆரம்பம் 27.01.03.(3.15)

☆ சனி, ஞாயிறு வகுப்பு தூர இடத்து மாணவர்களின் நலன் கருதி நடத்தப்படுகிறது.

☆ இம்முறை பிரிவு 3 மட்டுமே.

☆ O/L Sat/Sunday தரம் 10 வகுப்புகளுக்கு அனுமதி வழங்கப்படுகின்றன.

(சி-529)

COTTON SHIRT

ரூபா 275/=



விரும்பிய வர்ணங்களில்
தேவையான அளவுகளில்
உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப தெரிவு செய்ய
வாருங்கள்

வேம்படிச் சந்தி , ஆஸ்பத்திரி வீதி,
(TASTY FAST FOOD) முன்பாக,
யாழ்ப்பாணம்.

(சி-528)

இன்று காணத்தவறாதீர்கள் யாழ் பல்கலைக்கழககைலாசபதி கலையரங்கில் இரு காட்சிகளாக காலை 10.30/ மாலை 3.30

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்

கூட்டுருவாக்கம்
சாந்தினி சிவநேசன், தவநாதன் றொபேட், சா.சிவயோகன், இ.முருகையன்,
குழந்தை ம.சண்முகலிங்கம்

ஆர்கொலோ சதுரர்
- நடன நாடகம்



நுழைவுச் சீட்டுக்கள் மண்டப வாயிலில்

எக்ஸ்போ எவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்

STP | ஈழநாடு | ஈஸ்வர பகவான் & கம்பனி | வேணி களஞ்சியம் | சாரங்கா நகைமாடம் | SINGER | EAWARAN TRADERS | பூபாலசிங்கம் புத்தகசாலை

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.